Vlambaram -June 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-05-31 5:04 PM Page 1






35ஆவது ஆண்டில்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM

email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நதி: 35 பாலம்: 11 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JUNE 01, 2025

# புதிய கனடிய மத்திய அரசு

2025 ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெற்ற கனடாவின் 45ஆவது நாடாளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலில் அதிகப்படியான ஆசனங்களைப்பெற்று லிபரல் கட்சி மீண்டும் நான்காவது முறை ஆட்சி அமைத்தது. லிபரல் கட்சியின் தலைவர் மார்க் காணி முதல் முறையாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டதுடன் கனடாவின் 24ஆவது பிரதமராகவும் பதவி ஏற்றார்.

2025 மே 13ஆம் திகதி ஒட்டாவாவில் உள்ள Rideau Hallஇல் கனடாவின் ஆளுநர் மேரி சைமன் (Mary Simon) தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் மார்க் காணி பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றார். அவரைத் தொடர்ந்து 28 அமைச்சர்களும், 10 அரச செயலாளர்களும் பதவி ஏற்றனர்.

பிரதமர், அமைச்சர்கள் மற்றும் அரச செயலாளர்கள் என பதவியேற்ற 39 பேரில் 14பேர் மட்டுமே முந்திய லிபரல் அரசில் அமைச்சர் பதவிகளை வகித்தவர்கள். 15 அமைச்சர்களும் 9 அரச செயலாளர்களும் மற்றும் பிரதமர் உட்பட புதுமுகங்கள்.

அரச செயலாளர் பதவி என்பது உதவி அமைச்சர் பதவியைப் போன்றது. இவர்கள் ஒரு குறிப்பிட்ட விடயத்தில் தமது அமைச்சருக்குத் துணைபுரிவர்.

அரச செயலாளர்கள் அமைச்சரவை உறுப்பினராகக் கருதப்பட மாட்டார்கள். அவர்களின் பொறுப்பில் உள்ள விடயங்களைப்பற்றி கலந்துரையாடும்போது அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்திலோ அல்லது அமைச்சரவைக் குழுக் கூட்டங்களிலோ (Cabinet Committee) பங்கேற்கலாம். அவர்கள் நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்களின்போது அமைச்சருக்கு ஆதரவையும், நிபுணத்துவத்தையும் வழங்குவர்.

David McGuinty பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். இவருக்கு உதவி அமைச்சராக Stephen Fuhr அரச செயலாளராகப் பதவி ஏற்றுள்ளார். Stephen Fuhr பாதுகாப்பு தொடர்பான கொள்முதல் (procurement) விடயங்களைப் பொறுப்பேற்று நடத்துவார். கனடிய மத்திய அரசின் அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சிற்கு ஓர் இணை அமைச்சரும் நியமிக்கப்படுவது வழக்கம். பாதுகாப்பு இணை அமைச்சர் சேவையில் இருந்து இளைப்பாறிய படைவீரர்களது (Veterans Affairs) விவகாரங்களைக் கவனிப்பார். Jill McKnight பாதுகாப்பு இணை அமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார்.



பொதுப் பாதுகாப்பு அமைச்சராக (Public Safety) ஹரி ஆனந்தசங்கரி பதவி ஏற்றுள்ளார். மார்க் காணியின் தேர்தலுக்கு முந்தைய அமைச்சரவையில் இவர் சட்டமா அதிபராகவும், நீதி அமைச்சராகவும் பதவி வகித்தவர். அத்துடன் 2024 டிசெம்பரிலிருந்து நாடாளுமன்றம் கலைக்கும்வரை அரச-சுதேச உறவுகள் அமைச்சராகவும் இருந்தவர்.

வெளியுறவுத்துறை அமைச்சராக (Foreign Affairs) அனிதா ஆனந்த் பதவியேற்றுள்ளார். மார்க் காணியின் தேர்தலுக்கு முந்தைய அமைச்சரவையில் புத்தாக்கம், விஞ்ஞானம் மற்றும் தொழில்துறை அமைச்சராக இருந்தவர். இவர் முன்னர் பொதுச்சேவை மற்றும் கொள்முதல் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, உள்நாட்டு வர்த்தகம் மற்றும் போக்குவரத்து, கருவூல வாரியத்தின் தலைவராகவும் இருந்தவர். அனிதா ஆனந்த் தற்போது மத்திய அரசின் ஆறாவது அமைச்சிற்கு அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

இவர்களைவிட முன்னாள் அமைச்சர்களான Melanie Joy தொழில்துறை அமைச்சராகவும் (Industry), குவிபெக் பிராந்தியத்தின் கனடா பொருளாதாரத்தின் மேம்பாட்டுக்குப் பொறுப்பான அமைச்சராகவும் பதவியேற்றுள்ளார். Chrystia Freeland போக்குவரத்து மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராகப் (Transport and Internal Trade) பதவி ஏற்றுள்ளார்.

புதிதாக மார்க் காணியின் தற்போதைய அமைச்சரவையில் பதவியேற்றவர்களில் ஒன்பது பேர் இம்முறை முதற்தடவை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

CBC மற்றும் CTV ஊடகங்களில் பணியாற்றிய ஊடகவியலாளர் Evan Solomon இம்முறை முதற்தடவையாக 'ரொறொன்ரோ மத்திய' தொகுதியில் இருந்து லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர். இவர் செயற்கை நுண்ணறிவு மற்றும் Digital கண்டுபிடிப்பு அமைச்சராகவும் (Artificial Intelligence and Digital Innovation), தெற்கு ஒன்ராறியோ பிராந்தியத்தின் கனடா பொருளாதாரத்தின் மேம்பாட்டுக்குப் பொறுப்பான அமைச்சராகவும் பதவியேற்றுள்ளார்.

'எட்மண்டன் மத்திய' தொகுதியிலிருந்து லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இம்முறை முதற்தடவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள Eleanor Olszewski அல்பேட்டா மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரேயொரு அமைச்சர் ஆவார். இவர் கனடாவின் அவசரநிலை மேலாண்மை மற்றும் சமூக நெகிழ்வுத்தன்மை அமைச்சராகவும் (Emergency Management and Community Resilience) கனடாவின் பரந்தவெளிப் பிராந்தியத்தின் (Alberta, Saskatchewan and Manitoba மாகாணங்கள்) கனடா பொருளாதாரத்தின் மேம்பாட்டுக்குப் பொறுப்பான அமைச்சராகவும் பதவி ஏற்றுள்ளார்.

'Vancouver Fraserview-South Burnaby' தொகுதியிலிருந்து லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இம்முறை முதற்தடவையாகத் தெரிவு செய்யப்பட்ட Gregor Robertson வன்கூவர் முன்னாள் நகர முதல்வர் ஆவார். இவர் வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு அமைச்சராகவும் (Housing and Infrastructure) பிரிட்டிஷ் கொலம்பியா பிராந்தியத்தின் கனடா பொருளாதாரத்தின் மேம்பாட்டுக்குப் பொறுப்பான அமைச்சராகவும் பதவி ஏற்றுள்ளார்.

கனடிய புதிய அமைச்சரவை உறுப்பினர்கள் கனடாவில் 10 மாகாணங்களையும் பிரதிநிதிப்படுத்துகின்றனர். ஆனால், கனடாவின் மூன்று பிராந்தியங்களில் ஒரு பிராந்தியத்தைச் சேர்ந்தவரே அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்













GTA Square, 5215 Finch Ave. E., #201, Toronto, ON M1S 0C2, Canada. Tel: 416.282.8059 | Fax: 416.286.0334, Email: vlambaram@sympatico.ca, info@vlambaram.com. Web: www.vlambaram.com

# House for Sale / Lease / Condo / BSMT

## House for Sale

Detached House
3BR + 1BR BSMT
Asking $899 K
Separate Entrance

Morningside | Sewells

George Paranthaman**
Call : 416 277 9044

## Condo for Sale

2 BR. + DEN
2 Washroom
Spacious Balcony
UG Parking
Walk to Go Station

3 Years Old Pickering
Asking $649,900

Vishal Sarda*
Call : 416 629 1973

## Condo For Sale

Downtown Toronto
Condo for Sale

300 Front Street
2BR + 2WR Parking
$935,000

Deepak Dani **
Call : 416 930 9733

## Office Unit for Sale

GTA Square
Finch Avenue /
Middlefield
Main Floor Unit
Busy Mall
Under ground Parking

$279k

Matt Nadarajah*
Call : 416 960 6130

## Condo for Rent

2BR / 2WR
805 SF

Pickering $2550

Casey Woo *
Call : 647 801 6770

## Condo For Rent

2BR + 2WR + Parking

Kennedy / HWY 401

Tridel Building

Gulshan Sharma**
Call : 416 407 5911

## House for Sale

Detached Scarboro
4 BR + 2BR
7 Wash Rooms
Custom Build Basement
Finched Washroom
Kitchen
Walk - up
(Kennedy / Sheppard)

Rajiv Agnihotri *
Call : 416 930 0684

To Join
HomeLife/GTA
Realty Inc.
Call at :
416 321 6969
Email:
gtarealty@gmail.com

*One of the Best Brokerage in East Toronto.*

## House for Sale

Detached 2 Storey
4BR + 1 BR
5 WR
Over 2000 SF

Markham
(14th AVE / 9th Line)

Amal Joseph*
Call : 416 300 8294

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2

Tel: 416-321-6969

* Sales Rep.
** Broker

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# என்பிபி அரசைத் துரத்தும் பிரச்சினைகள்

– அரவின் –

உள்ளூராட்சித் தேர்தல் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பல முனைகளில் சிக்கலைத் தோற்றுவித்திருக்கிறது.

269 சபைகளில் வெற்றியீட்டியிருப்பதாகக் கூறினாலும், அந்தக் கட்சி தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய உள்ளூராட்சி சபைகள் வெறுமனே, 116 மட்டும்தான்.

150 சபைகளில், அந்தக் கட்சி பிற கட்சிகளின் தயவுடன் மட்டுமே, ஆட்சி அமைக்ககூடிய நிலையில் இருக்கிறது.

ஏனைய இடங்களில் எதிர்க்கட்சிகளே ஆட்சி அமைக்கக்கூடிய வல்லமை பெற்றிருக்கின்றன.

தனித்து ஆட்சிமைக்கக்கூடிய சபைகளில் சிக்கல் இல்லை. கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கவேண்டிய நிலையிலுள்ள சுமார் 150 உள்ளூராட்சி சபைகள் தான், என்பிபி அரசாங்கத்துக்கு சவாலாக உள்ளது.

ஏனென்றால், இவற்றில் பலவற்றில், ஏனைய எதிர்க்கட்சிகள் ஒன்றாக இணைந்து ஆட்சிமைக்கக்கூடிய வாய்ப்புகளும் இருக்கின்றன.

என்பிபி ஆரம்பத்திலேயே தாங்கள் யாருடனும் கூட்டு சேரமாட்டோம் எனக் கூறி இருந்தது. தங்களுக்கு முழு வெற்றி கிடைக்கும் என்று நம்பியதே அதற்குக் காரணம்.

தேர்தலில் அந்த நம்பிக்கை தகர்ந்து போன பின்னர், வேறு வழியின்றி பழைய நிலைப்பாடுகளை மாற்றிக்கொண்டு, கூட்டுச் சேரவேண்டிய நிலையில் இருக்கிறது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுடன் கடைசி வரையில் கூட்டுச் சேர மாட்டோம் என்று அது திட்டவட்டமாகக் கூறுகிறது. ஆனாலும் ஆட்சிமைப்பதற்காக, அந்தக் கட்சிகளுடன் பேச்சு நடத்தாவிட்டாலும், அந்தக் கட்சிகளின் உறுப்பினர்களுடன் குதிரை பேரங்கள் நடத்தப்படுகின்றன.

ஜேவிபி என்றால், அது ஒரு கொள்கை நிலைப்பாடுள்ள கட்சி என்ற கருத்து நீண்டகாலமாக இருந்து வந்தது.



அவர்கள் பணத்துக்காக விலை போக மாட்டார்கள், கட்சி தாவமாட்டார்கள், மலினத்தனமான அரசியலில் ஈடுபட மாட்டார்கள், ஊழல், மோசடிகளில் ஈடுபட மாட்டார்கள் என்பன போன்ற அசட்டு நம்பிக்கைகள் முன்னொரு காலத்தில் மக்கள் மத்தியில் இருந்தன.

இப்போது அப்படியான நம்பிக்கைகளை மறந்துவிட வேண்டும். ஏனென்றால், என்பிபி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் அந்த நம்பிக்கைகளைக் காப்பாற்றும் வகையில் செயற்படவில்லை.

குறுகிய காலத்துக்குள்ளாகவே அதன் மீதான நம்பிக்கைகளைச் சிதைத்து விட்டது.

முன்பெல்லாம் மகிந்த ராஜபக்ச, சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் குதிரை பேர அரசியலை முன்னெடுத்திருந்தனர்.
ஆட்சியமைப்பதற்குப் போதிய பெரும் பான்மை கிடைக்காத சந்தர்ப்பங்களில், நாடாளுமன்றத்தில், மாகாண சபைகளில், உள்ளூராட்சி சபைகளில் குதிரை பேரங்களை நடத்தி ஆட்களை தங்களின் பக்கம் இழுத்தனர்.

அதையெல்லாம் கடுமையாக விமர்சித்து வந்த ஜேவிபியின் தலைவர்கள்கூட, பேரம் பேசுவதாக தகவல்கள் வெளியாகின்றன.

கட்சிகளுடன் பேரம் பேசமாட்டோம் சுயேட்சைக் குழுக்கள், தனிநபர்களுடன் ஆட்சியமைக்கப் பேச்சு நடத்துவோம் என ஜேவிபியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வாவே கூறியிருந்தார்.

இதன்விளைவாக, புத்தளம் மாவட்டத்தில் ஓர் உள்ளூராட்சி சபையில் ஆட்சி அமைப்பதற்காக, உறுப்பினர் ஒருவரின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு, 25 இலட்சம் ரூபாய் தருவதாக பேரம் பேசப்பட்டிருக்கிறது. இதுபோல, பல இடங்களில் நடந்து இருக்கின்றது.

இவையெல்லாம் என்பிபி மீது நம்பிக்கை வைத்திருந்த மக்கள் மத்தியில், பலத்த விமர்சனத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

கொழும்பு மாநகரசபையில் ஆட்சி அமைப்பதற்குப் போதுமான பலமில்லாத நிலையில், எப்படியும் அங்கு தாமே ஆட்சி அமைப்போம் என கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது என்பிபி.

அங்கு ஆட்சி அமைப்பதற்கு சுயேட்சைக் குழுக்களை வளைத்துப் போடுவதற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவே நேரடியாகக் களம் இறங்கியிருக்கிறார்.

அவர் நேரடியாக களம் இறங்கி, முழு அளவில் பிரசாரம் செய்தும்கூட, தேசிய மக்கள் சக்தியால் மூன்றில் ஒரு பங்கு உள்ளூராட்சி சபைகளில் மட்டுமே, அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கிறது.

அதனால் இழந்த வாய்ப்புகளைப்பெற்றுக் கொள்வதற்காக அனுரகுமார திசாநாயக்க கூட பேரம் பேசலில் இறங்கி இருக்கிறார்.

கொழும்பு மாநகரசபைக்கு, லாந்தர் சின்னத்தில் போட்டியிட்ட குருசாமி தலைமையிலான சுயேட்சைக்குழு, பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் காங்கிரஸ் போன்றவற்றுடன் பேச்சு நடத்தி, என்பிபியின் பக்கம் இழுத்திருக்கிறார்.

ஒரு கோரிக்கையும் இல்லாமல், எந்த ஒரு நிபந்தனையும் இல்லாமல், என்பிபிக்கு வழங்கப்பட்ட ஆதரவு என்று நம்ப முடியாது. ஏனென்றால் அரசியலில் எல்லாமே பேரத்துக்கு உட்பட்டவை.

நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாக இருந்தால், இந்த இரண்டு தரப்புகளும் ஆரம்பத்திலேயே, அதனைக் கூறியிருக்க வேண்டும்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலையிட்டு பேச்சு நடத்தி இணக்கப் பாட்டை ஏற்படுத்தும் அளவிற்கு அங்கு உச்சக்கட்ட பேரம் நடந்திருக்கிறது.

இதற்குப்பின்னரும் நிபந்தனையற்ற ஆதரவு கொடுத்தோம், எந்த பிரதிபலனும் எதிர்பாராமல், என்பிபிக்கு ஆதரவளிக்கப் படுகிறது என்று கூற முடியாது.

என்பிபி அரசாங்கம் இந்த விடயத்தில் மாத்திரமல்ல, பல்வேறு விடயங்களில் இந்தத் தேர்தலினால் சிக்கல்களை எதிர்கொள்கிறது. இந்தத் தேர்தலின்மூலம் என்பிபி அரசாங்கம் கணிசமான வாக்குகளை இழந்திருப்பது உறுதியாகி உள்ளது.

அந்த இழப்பு, என்பிபி அரசாங்கம் மக்கள் ஆணையை இழந்து விட்டது என்ற பிரச்சாரத்திற்கும் வழிவகுத்து இருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலில், ஆறு மாதங்களுக்கு முன்னர் கொடுத்த மக்கள் ஆணை, 5 ஆண்டுகளுக்குரியது.

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குகள் குறைந்து விட்டன என்பதற்காக, அந்த மக்கள் ஆணை முற்று முழுதாக நீங்கி விடாது.

என்பிபி அரசாங்கத்தை எதிர்க்கட்சிகள் குறைமதிப்புக்கு உட்படுத்தும் வகையில், மக்கள் ஆணையை இழந்து விட்டதான பிரசாரத்தை முன்னெடுக்கின்றன.

இன்னும் ஒரு வருடத்திற்குக்கூட, இந்த அரசாங்கம் தாக்குப் பிடிக்காது. அடுத்த மாதம் 24ஆம் திகதி இந்த அரசாங்கமே இருக்காது. ஆட்சியில் அமர்த்தியவர்களே அதனை வெளியே துரத்தி விடுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜெயமகா கூறியிருக்கிறார்.

இதுபோன்ற கடுமையான விமர்சனங்கள் எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்படுகின்றன.

நாடாளுமன்றத்தில் என்பிபியின் சார்பில், சில குறிப்பிட்ட உறுப்பினர்கள்தான் அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்கள்தான் எதையும் சமாளிக்கக்கூடியவர்கள். வாதங் களை மறுத்துப் பேசக்கூடியவர்கள்.

பிமல் ரத்நாயக்க, வசந்த சமரசிங்க, விஜித ஹேரத், சுனில் ஹந்துநெத்தி போன்றவர்களே அவர்கள். மற்றவர்கள் ஏடாகூடமாக எதையாவது பேசி, சிக்கலை ஏற்படுத்தக்கூடியவர்கள்.

அதனால் அவர்களை அதிகம் பேச வேண்டாம் என்று, ஜேவிபி பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, ஏற்கனவே தடை உத்தரவு போட்டிருந்தார்.

ஆனால் இப்பொழுது, என்பிபியின் மூத்த தலைவர்களே நாடாளுமன்றத்தில் தடு மாறத் தொடங்கி விட்டனர்.

எதிர்க்கட்சியினர் தொடுக்கும் கேள்வி களுக்குப் பதிலளிக்க முடியாமல், அவசியமின்றி ஆவேசமடைகின்றனர்.

வார்த்தைகளால் அவர்களை அடக்கப் பார்க்கின்றனர். கத்திக் கூச்சலிட்டு, கூப்பாடு போட்டு இல்லாத விடயங்களைக் கூறி, திசை திருப்பப் பார்க்கின்றனர்.

இது அவர்களின் பலவீனத்தைக் காட்டு கிறது. அவர்கள் பதற்றமடையத் தொடங்கி விட்டனர் என்பதைக் காட்டுகிறது.

நாட்டின் பொருளாதாரச் சூழலும் அரசியல் சூழலும் அவர்களின் இந்த நிலைக்கு காரணம்.

பொருளாதார ரீதியாக அரசாங்கம் கடுமையான சிக்கலை எதிர்கொள்கிறது. ஆனால் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

மீண்டும் மின்சாரக் கட்டணத்தை

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# புதிய கனடிய....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரதமராகப் பதவியேற்ற பின்னர் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய உரையில் மார்க் காணி தனது புதிய அரசாங்கம் வலுவான ஆணையை கனடிய மக்களிடம் பெற்றுள்ளது. அது அமெரிக்காவுடன் ஒரு புதிய பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவை வரையறுக்கும். அத்துடன் அனைத்து கனடியர்களுக்கும் ஒரு வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தும். இந்த அமைச்சரவை முந்தைய அரசாங்கங்களைவிட சிறியதாகவும், அதிக கவனம் செலுத்தக் கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. கனடாவின் வரலாற்றில் இந்த முக்கியமான தருணத்திற்காக வடிவமைக்கப்பட்ட இப்புதிய குழுவுடன் எமக்கு வழங்கப்பட்ட ஆணையை நிறைவேற்றப் போகிறோம் என்றார்.



Prime Minister Mark Carney    Thanks: Canadian Mortgage Trends

வழமையாக அமைச்சர்கள் பதவியேற்கும் போது அவர்களுக்கு என்ன விடயங்களில் முதன்மையாகக் கவனம் செலுத்த வேண்டுமென ஒரு கடிதம் பிரதமரால் வழங்கப்படும். ஆனால், மார்க் காணி ஒவ்வொரு அமைச்சருக்கும் ஒவ்வொரு கடிதம் என்று வழங்காமல் எல்லா அமைச்சர்களுக்கும் ஒரு பொதுவான கடிதத்தையே வழங்கியுள்ளார். அதில் கனடாவின் 30ஆவது அமைச்சரவையான தனது அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவருக்கும் அவர்கள் முதன்மையாகக் கவனம் செலுத்த வேண்டுமென ஏழு விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார். இந்த 800 சொற்களை மட்டுமே கொண்டுள்ள கடிதத்தில் அவர், “கனடா தொடர்ச்சியாகப் பல நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. மிகவும் ஆபத்தான மற்றும் பிளவுபட்ட உலகில் புவிசார் அரசியல் அபாயங்கள் அதிகரித்து வருகின்றன. இது நமது இறையாண்மையை அச்சுறுத்துகிறது. உலகளாவிய வர்த்தக அமைப்பு மிகப்பெரிய மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. உள்நாட்டில் நமது நீண்டகால பலவீனமான உற்பத்தித் திறன் அரசாங்க நிதி நிலைமையை பலவீனமாக்கியுள்ளது. கனடிய குடும்பங்களுக்கு வாழ்க்கைச் செலவு கட்டுப்பாட்டுக்குள் வர மறுக்கிறது. கனடியர் நம்பியிருக்கும் முக்கிய சமூகத் திட்டங்களின் நிலைத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. எமது புதிய அரசிற்கு இந்த சவால்களை எதிர்கொள்ளும் மகத்தான பொறுப்பு உள்ளது. நாங்கள் முந்தைய அரசாங்கங்களைவிட வேறுபட்ட நிர்வாக அணுகுமுறைகளுடன் மிகவும் கவனத்துடனும், பொறுப்புடனும் உறுதிப்பாட்டுடன் இவற்றை எதிர் கொள்வோம்.



Prime Minister Mark Carney.    Thanks: Prime Minister of Canada/X

செயற்கை நுண்ணறிவை அளவுடன் பயன்படுத்துவதுடன், செலவினங்களைவிட அதன் விளைவுகளில் கவனம் செலுத்துவதன் மூலமும் தனியார் முதலீடுகளை பல மடங்கு ஊக்குவிப்பதன் மூலமும், மக்களின் வரிப்பணத்தைக் கவனமாக முதலிடுவதன் மூலமும் அரசாங்கம் அதிக உற்பத்தித் திறன் (More productive) கொண்டதாக மாற வேண்டும். நாங்கள் பின்வரும் ஏழு விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

1. அமெரிக்காவுடன் ஒரு புதிய பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவை நிறுவுதல் மற்றும் உலகெங்கிலும் உள்ள நம்பகமான வர்த்தக நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் எங்கள் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்.

2. கனடிய மாகாணங்களுக்கு இடையேயான வர்த்தகத்திற்கான தடைகளை நீக்கி, நமது நாட்டை ஒன்றிணைக்கும் திட்டங்களை அடையாளங்கண்டு அவற்றை விரைவுப்படுத்துவதன்மூலம் ஒரு கனடியப் பொருளாதாரத்தை உருவாக்குதல்.

3. கனடிய மக்களுக்கான செலவுகளைக் குறைத்து அவர்களை வாழ்க்கையில் முன்னேற உதவுதல்.

4. அரசு-தனியார் ஒத்துழைப்பின் கூட்டுறவின் மூலமும், நவீன வீடு கட்டுமான வசதி முறைகளை ஊக்குவிப்பதன் மூலமும், அதிகளவில் புதிய தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்து திறமையான கட்டுமானத் தொழிலாளர்களை உருவாக்குவதன் மூலமும், மக்களுக்கு வீட்டு வசதியை அவர்களுக்குக் கட்டுப்படும் விலைக்குள் கொண்டு வருதல்.



Gary Anandasangaree
Minister of Public Safety

5. கனடிய ஆயுதப்படைகளை வலுப்படுத்துவதன்மூலமும் நமது எல்லைகளை பாதுகாப்பதன் மூலமும், நாட்டில் சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்துவதன் மூலமும் கனடிய இறையாண்மையைப் பாதுகாத்தல் மற்றும் கனடியர்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.

6. நமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப உதவும்வகையில் உலகின் சிறந்த திறமையாளர்களை கனடாவிற்குக் குடிபெயர ஊக்குவிப்பது, அதேநேரத்தில் நமது ஒட்டுமொத்தக் குடியேற்ற விகிதங்களை நிலையான நிலைக்குத் திரும்பச் செய்வது.

7. அரசாங்க நடவடிக்கைகளில் செலவைக் கட்டுப்படுத்துவதன்மூலம் கனடியர், நிறுவனங்கள் மற்றும் மனித வளங்களில் அதிக முதலீடு செய்து கனடாவின் பொருளாதாரத்தை G7 நாடுகளில் அதிக வலுவான பொருளாதார வளர்ச்சி உள்ள நாடாக உருவாக்குதல்.

அமைச்சரவையின் வழிகாட்டுதலுடன் ஒவ்வொரு அமைச்சரவைக் குழுவும் அதன் தலைவரின் தலைமையில் இயங்கி இவ்விடயங்களில் எங்கள் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்” எனக் குறிப்பிட்டிருந்தார்.



Anita Anand - Minister of Foreign Affairs    Thanks: Wikipedia

திட்டமிட்ட நேரத்தைவிட 30 முதல் 60 நிமிடங்கள்வரை தாமதமாக நிகழ்வுகளைத் தொடங்குபவரான முன்னாள் பிரதமரான ஜஸ்ரின் ரூடோவைவிட நேரம் தவறாமல் குறித்த நேரத்திற்குத் திட்டமிட்டபடியே நிகழ்வுகளைத் தொடங்கும் முன்னாள் வங்கியாளரான தற்போதைய பிரதமர் மார்க் காணியின் வேறுபாட்டை National Post ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. அந்த ஊடகம் கனடியப் பொருளாதாரத்தை மறுவடிவமைக்கும் ஓர் இலட்சிய நிகழ்ச்சி நிரலை வழங்குவதில் மார்க் காணி மிகவும் கவனம் செலுத்துகிறார் எனவும், அவர் நேரம் தவறாமையைத் தவறாமல் கடைப்பிடிப்பவர் (Fiercely Punctual) எனவும், தனது கூட்டங்களில் நேரம் தவறாமையையும், திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலைப் பாவித்து கட்டுப்பாட்டுடன் நடத்துபவர் எனவும் மேலும் தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள் பிரதமரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப செயல்படவில்லை என்றால் அல்லது அவர்கள் பணிகளை விரைவாக நிறைவேற்றுவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்கத் தவறினால் அவர்கள் தமது பதவிகளில் நீடிக்க வாய்ப்பு இல்லை. இதனால், ஒரு வருடத்திற்குள் சில அமைச்சுப் பதவிகளில் மாற்றம் வரலாம் எனவும் National Post ஊடகம் தெரிவித்துள்ளது.



New Speaker Francis Scarpaleggia    Thanks: Adrian Wyld/The Canadian Press

மொன்றியலில் உள்ள Lac-Saint-Louis தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான லிபரல் கட்சியைச் சேர்ந்த Francis Scartaleggia மே 26இல் நடைபெற்ற கனடிய 45ஆவது நாடாளுமன்ற முதல் நாள் கூட்டத்தில் நாடாளுமன்றத்தின் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். சபாநாயகர் தெரிவைத் தொடர்ந்து பிரித்தானிய அரச நாடாளுமன்றப் பாரம்பரியத்தின்படி கனடியப் பிரதமர் மார்க் காணியும் இடைக்கால எதிர்க்கட்சித் தலைவர் அன்றூ சியரும் சபாநாயகரை இழுத்துக்கொண்டு சென்று சபாநாயகருக்குரிய கதிரையில் அமர்த்தினர்.



Vlambaram -June 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-05-31 5:04 PM Page 6



# மிரள வைத்த இனப்படுகொலை நினைவேந்தல்

## – முகிலன் –

16 ஆண்டுகளுக்குப் பின்னர், முள்ளி வாய்க்கால் படுகொலை நினைவேந்தல் இலங்கையில் மாத்திரமன்றி, சர்வதேச அளவிலும் அதிக கவனிப்பைப் பெற்றிருக் கிறது. இதற்கு முன்னரான காலகட்டங் களைவிட, இம்முறை அது அதிக வீச்சையும் வீரியத்தையும் கொண்டதாக மாறியிருக்கிறது.

இந்த மாற்றம் எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது? என்ற கேள்வி பரவலாக இருக்கிறது.

இலங்கையில் கடைசியாக நடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி, அதற்குப் பின்னரான உள்ளூராட்சித் தேர்தலில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் எல்லாமே, இதனுடன் தொடர்புபட்டவையாக இருக்கின்றன.

தற்போது ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தேர்தல்களின் போது, தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

நிறைவேற்றுவதற்கான எந்த அறிகுறகளை யும் வெளிப்படுத்தவும் இல்லை.

வெறுமனே இனவாதம் அற்ற ஆட்சியை நடத்துகிறோம் எனக் கூறிக் கொண்டாலும், அது முற்றுமுழுதாக சிங்கள பௌத்த நலன் நோக்கிய ஓர் ஆட்சியையே, நடத்திக் கொண்டிருக்கிறது.

தீர்வு காணக்கூடிய பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காமல் காலத்தை இழுத்து அடிப்பதில் கவனம் செலுத்துகிறது.

தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு சரியான தீர்வை வழங்காமல், சறுக்கிக் கொண்டே போகிறது. அதன் பிரதான இலக்கு, விகாரையை அகற்றாமல் காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக்காணிகளை வழங்குவதுதான். அவர்கள் மாற்றுக் காணிகளை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதற்காக, அரசாங்கம் பல வழிகளில் முயற்சிக்கிறது. அதுதான் அவர்களுடைய தீர்வு.

திஸ்ஸ விகாரையை சட்டவிரோதமானது என ஏற்றுக்கொண்டாலும், சட்டவிரோத மான அந்தக் கட்டடத்தை அகற்றி உரிமையாளர்களிடம் அதனைக் கொடுக் கின்ற திராணி என்பிபி அரசாங்கத்திடம் கிடையாது. அது வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், சிங்கள பௌத்த அரசாங்கமே அது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆட்சிக்கு வந்தபின்னர், சிங்கள பௌத்த மக்களையும் பௌத்த பீடங்களையும் திருப்திப்படுத்துவதில், அவர்கள் முக்கிய கவனம் செலுத்துகின்றனர்.




கிரமமான முறையில் தலதா மாளிகைக் குச் செல்கின்றனர், மகாநாயக்கர்களைச் சந்திக்கின்றனர், தேவைப்படும்போது அவர்களின் அனுமதிகளைப் பெற்றுக் கொள்கின்றனர், சர்ச்சைக்குரிய விடயங் கள் குறித்து அவர்களின் ஆலோசனை களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இது பாரம்பரிய ஜேவிபி ஆதரவாளர் களையே திகைக்க வைத்திருக்கிறது. இப்படியிருக்க, இப்பொழுது உகந்தை முருகன் ஆலயத்திற்கு அருகே உள்ள வள்ளியம்மன் மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டிருக்கிறது.

இதுபோன்றுதான் வடக்கு, கிழக்கில் நிலங்கள் அபகரிக்கப்படுவதும் பௌத்த மயமாக்கப்படுவதும் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறது.

குருந்தூர் மலையில் தொல்லியல் இடம் என அடையாளப்படுத்திய இடத்துக்கு வெளியில்கூட, நிலத்தின் உரிமையாளர் களான விவசாயிகளால் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறது. அங்கு நிலத்தை உழுதவர்கள் இன்று சிறையில் இருக்கின்றனர்.

இதேநிலை திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங் களில் பல இடங்களில் காணப்படுகிறது.

இதுபோன்ற பிரச்சினைகளுக்குக்கூட தீர்வை வழங்குவதற்கு முன்வராத என்பிபி அரசாங்கம் வடக்கு, கிழக்கில் உள்ள உரிமை கோரப்படாத காணிகளை அரச காணிகளாக சுவீகரிப்பதற்கு ஓர் இரகசிய திட்டத்தை செயற்படுத்தியது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகவும் இரகசியமான முறையில் இதனை மேற்கொண்டது.

வடக்கில் மாத்திரம் சுமார் 6000 ஏக்கர் காணிகளை அரச காணிகளாகச் சுவீகரிக்கும் வகையில் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதுபற்றி யாருக்கும் தெரியாது. வர்த்தமானி கிரமமாக, முழுமையாகப் படிப்போர் மிகமிகக் குறைவு.

அதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, என்பிபி அரசாங்கம் இந்த வேலையை முன்னெடுத்தது.

ஆனால், அதன் துரதிஷ்டம் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னதாகவே இந்த இரகசிய திட்டம் வெளிச்சத்துக்கு வந்தது.

இதன்விளைவாக வடக்கு கிழக்கில் என்பிபி அரசாங்கமும் கடந்தகால சிங்கள பௌத்த ஆட்சியாளர்களைப் போலவே செயற்படுகிறது என்ற உண்மை, தமிழ் மக்களுக்குப் புரிந்தது.

அதன்விளைவை தேர்தல் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தெளிவாகவே எடுத்துக் காட்டின.

உள்ளூராட்சித் தேர்தலில் என்பிபி அடைந்த பின்னடைவுக்கு அரசாங்கம் இரகசியமாக வெளியிட்ட வர்த்தமானியும் ஒரு முக்கிய காரணம்.

இது என்பிபி அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை, தமிழ் மக்களின் நிலங்களை யும் உரிமைகளையும் பறிப்பதில் அது காட்டும் அக்கறையை வெளிப்படுத்தியது. அது பிரசார பொருளாக மாறியதும் என்பிபி ஆட்சியாளர்களால் எதையும் செய்ய முடியவில்லை. அதற்கு மாற்றான பிரச்சாரத்தையும் முன்னெடுக்க முடிய வில்லை.

அப்படி ஒரு வர்த்தமானி வெளியிடப்படவே இல்லை என்று யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவான என்பிபி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சாதிக்க முனைந்து தோன்றுப் போனார்கள். இது அவர்களுக்கு இன்று மிகப்பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது.

அதனால்தான், வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளை இனவாதிகளாக அடையாளப்படுத்துகின்ற போக்கை வெளிப்படுத்தி வருகிறது.

இப்பொழுது ஆளும்கட்சியை சேர்ந்த அமைச்சர்கள் எல்லோருமே, வடக்கிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளை இனவாதக் கட்சிகளாகக் குறிப்பிடுகின்றனர். இன வாதம் பேசுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

அண்மையில் ஜேவிபியின் மூத்த



உறுப்பினரும் அவை முதல்வருமான அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஓர் ஊடகச் செவ்வியில், உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் ராஜபக்சக்கள் தோற்றம் பெற்று இருக்கின்றனர் என்று குற்றம்சாட்டி இருக்கிறார்.

ராஜபக்சக்கள் இனவாதிகளாக மாத்திரம் இருக்கவில்லை.

அவர்கள் ஊழல் செய்தனர், படுகொலைகளைச் செய்தனர், நாட்டின் வளங்களை சுரண்டினர், அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தினர்.

அப்படிப்பட்ட ராஜபக்சவினருடன், தமிழ் அரசியல்வாதிகளை ஒப்பீடு செய்து இருக்கிறார் பிமல் ரத்நாயக்க. இது தேசிய மக்கள் சக்தியின் இயலாமையைக் காட்டுகிறது.

தமிழ் அரசியல்வாதிகளை இனவாதி களாகக் காட்டுவதற்காக இவ்வாறான ஒரு முறையற்ற ஒப்பீட்டை அவர் செய்திருக்கிறார்.

அதுமாத்திரமல்ல, இனப்படுகொலை தொடர்பான குற்றச்சாட்டுகளும் என்பிபி அரசாங்கத்தைத் திணற வைத்திருக்கிறது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பெருமளவிலான மக்கள் அணி திரண்டது அதற்கு அதிர்ச்சியை கொடுத்திருக்கிறது. இம்முறை முன்னெப்போதும் இல்லாத அளவில் முள்ளிவாய்க்கால் தமிழின படுகொலை நினைவேந்தல் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

சர்வதேச அளவில்கூட அது இலங்கை அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதாக மாறியிருக்கிறது.

இதனால்தான் இனப்படுகொலை இடம் பெற்றதாக குற்றச்சாட்டை சுமத்துபவர்கள் மீது, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப் போவதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மிரட்டியிருக்கிறார்.

இந்த மிரட்டல் ஒரு பூமராங்கைபோல அரசாங்கத்தையே திருப்பித் தாக்கக் கூடியது என்ற புரிதல்கூட அவரிடம் இல்லாமல் போயிருக்கிறது. ஏனென்றால், இனப்படுகொலைக் குற்றச்சாட்டை தமிழர் முன்வைக்கின்றபோது, அதனை நிரூபிக்க

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340 .9490 / 416.732.2228

# தமிழர் வயது 4000 ஆண்டுகள்! – நேர்காணல் – அமர்நாத் ராமகிருஷ்ணா

**கண்ணன்**

தமிழ் மொழியின் தொன்மையை நிரூபிக்கும் ஓர் ஆய்வு உண்மையை வெளியிடுவதில், இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்துக்கு தயக்கம் உள்ளது மீண்டும் நிரூபணமாகியுள்ளது. அமர்நாத் ராமகிருஷ்ணா, தமிழர் மத்தியில் மீண்டும் பேசுபொருளாகி இருக்கிறார்.

தமிழ் மொழியின், தமிழர் பண்பாட்டின் தொன்மையையும் பெருமையையும் உலகறியச் செய்ததில் முக்கியமானது, தமிழ்நாட்டில் மதுரை அருகே நடந்த கீழடி அகழாய்வு. இந்த அகழாய்வின் தொடக்கப் புள்ளியாகவும் காரணமாகவும் இருந்தவர் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா. தற்போது இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையில் இயக்குநராகப் பணிபுரிந்து வருகிறார். இவர், கீழடியில் 2014ஆம் ஆண்டு தொடங்கி விரிவான அகழ்வு ஆராய்ச்சியை மேற்கொண்டு, அது குறித்த, 982 பக்க அறிக்கையை 2023 ஜனவரி 30 அன்று, இந்திய தொல் பொருள் ஆய்வு மையத்தின் இயக்குநர் ஜெனரலுக்கு அனுப்பினார். அந்த ஆய்வறிக்கையை வெளியிடாமல் காலம் தாழ்த்தி வந்த தொல்பொருள் ஆய்வு மையம், இப்போது திருத்தங்களைச் செய்து அறிக்கையை மீண்டும் சமர்ப்பிக்குமாறு அமர்நாத் ராம கிருஷ்ணாவுக்கு கடிதம் எழுதியுள்ளது.

முன்னதாக, மூத்த தொல்பொருள் ஆய்வாளர் டி. சத்தியமூர்த்தி, தமிழ்நாட்டில் திருநெல்வேலி அருகே ஆதிச்ச நல்லூரில் அகழாய்வு செய்து சமர்ப்பித்த அறிக்கையை நீதிமன்றத்தின் தலையீடு வரை 15 ஆண்டுகளாக வெளிச்சத்திற்கு வராமல் வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. கீழடி அகழாய்வையும்கூட தாமதப்படுத் தும் வகையில் 2017இல் அமர்நாத் ராமகிருஷ்ணா, தமிழ்நாட்டிலிருந்து அசாம் மாநிலத்துக்குப் பணியிட மாற்றம் செய்யப் பட்டார். அதன்பிறகு போராட்டங்கள், நீதிமன்ற வழக்கு எனப் பலகட்டங்கள் கடந்துதான் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கீழடியில் அகழாய்வை மேற்கொண்டது.



சமஸ்கிருதத்திற்குப் பிறகுதான் தமிழ் தோன்றியது என்று காட்டுவதற்காக, கிமு 300இற்கு முந்தைய காலத்திற்குத் தமிழரைக் கொண்டுசெல்ல இந்திய ஒன்றிய அரசு அனுமதிப்பதில்லை. மீறிச் சென்ற இடங்களில் அகழாய்வுகள் நிறுத்தப்பட்டன. அகழாய்வு முடிந்த இடங்களில் ஆய்வறிக்கைகள் முடக்கப் பட்டன. ஆதிச்சநல்லூர் போலவே தமிழ் நாட்டில் பொருந்தல், கொடுமணல், அரிக்கமேடு, பூம்புகார் உள்ளிட்ட பல இடங்களில் நடந்த ஆய்வு அறிக்கை களையும் இந்திய தொல்லியல் துறை முடக்கி வைத்துள்ளது. இப்போது கீழடியும்.

இந்நிலையில், அமர்நாத் ராமகிருஷ்ணா வைச் சந்தித்தோம். தமிழ்நாட்டில் இதுவரை நடந்துள்ள அகழாய்வுகளில் கீழடி ஏன் முக்கியமானது என்பது தொடர்பாக அமர்நாத் ராமகிருஷ்ணா நம்முடன் பேசினார்.

**கேள்வி - கீழடியில் அகழாய்வு செய்யலாம் என்று முதலில் எதனடிப்படை யில் முடிவு செய்தீர்கள்?**

**பதில்** - இதுவரை தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இரண்டு முறைகளில்தான் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஒன்று, தற்செயலான கண்டு பிடிப்பு (Accidental discovery) வேறு எதற்காகவோ ஓர் இடத்தில் தோண்டும் போது, எதேச்சையாக சில தடயங்கள் கிடைக்கும். சிந்துசமவெளி நாகரிகங்கள் அப்படித்தான் கண்டுபிடிக்கப்பட்டன. அந்தப் பகுதியில் ரயில் வழித்தடம் அமைப்பதற்காகத் தோண்டியபோது, பிராமணாபாத் என்ற இடத்தில் பெரிய பெரிய செங்கற்கள் கிடைத்தன. இதனால் தான் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி அது என்பது தெரியவந்தது.

அதற்கு முன்பு 1861இல் அலெக்சாண்டர் கன்னிங்காம் அந்த இடத்தைப் பார்த்துள் ளார். "புத்த ஸ்தூபங்கள்போல இருக்கு. எனவே, புத்தர் காலத்தைச் சேர்ந்த ஒரு பகுதியாகத்தான் அது இருக்க வேண்டும்" என்றுதான் சொன்னார். இந்நிலையில், பிராமணாபாத்தில் கிடைத்த செங்கற்கள் அடிப்படையில் இங்கே ஒரு நகர நாகரிகம் இருந்திருக்க வாய்ப்புள்ளது என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தோண்டினர். அப்படித்தான் சிந்துசமவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது. இது தற்செயல் கண்டுபிடிப்பு. இதுபோல்தான், தமிழ்நாட்டில் ஆதிச்ச நல்லூரும் ரயில்வே வழித்தடம் அமைக்கும்போது தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டது.



இன்னொரு முறை, அறிவியல் முறைப்படி அணுகுவது. அப்படித்தான் கீழடி கண்டு பிடிக்கப்பட்டது. மதுரையின் பெருமைக்கும் பாரம்பரியத்துக்கும் இலக்கிய ஆதாரங் களைப் போலவே எண்ணிலடங்காத வரலாற்று மற்றும் தொல்லியல் ஆதாரங் களும் உள்ளன. இந்தியாவில் இதுவரை கண்டறியப்பட்ட கல்வெட்டுகளில், மதுரை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்துதான், காலத்தால் மிகப் பழமை யான கல்வெட்டுகள் அதிகம் கிடைத்திருக் கின்றன. மதுரை அருகே சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புள்ளிமான் கோம்பை நடுகல் தமிழி எழுத்துக்கள் அசோகர் காலத்துக்கும் முன்பானது என அறிஞர்கள் கருதுகின்றனர். திருவிளை யாடல் புராணத்தில் பாண்டிய மன்னன் பெருமணலூரை (தற்போது மணலூர்) தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்ததாக உள்ளது. இதேபோன்று பல்வகை ஆதாரங்கள் இருந்தும்கூட இப்பகுதியில் விரிவான தொல்லியல் அகழாய்வு ஏதும் இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில்தான் மதுரை அருகே அகழாய்வு மேற்கொள்ள முடிவெடுத்தோம்.

2013ஆம் ஆண்டு இந்த ஆராய்ச்சியைத் தொடங்கினோம். ஆனால், தற்போதைய நிலையில் மதுரை நகருக்குள் தோண்ட முடியாது. எனவே, மதுரை அருகே அகழாய்வு செய்ய ஒரு சிறந்த இடத்தைத் தேடினோம். தென் தமிழ்நாட்டில் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராம



நாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களின் முக்கிய நீராதாரமாக விளங்குவது வைகை நதி, மேற்குத் தொடர்ச்சி மலையில் வெள்ளிமலை அருகில் உற்பத்தியாகி, ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆற்றங்கரை என்னும் பகுதியில் கடலில் கலக்கிறது. இதன் பள்ளத்தாக்கு முழுக்கத் தொல்லியல் வளமிக்கப் பகுதியாக இருக்கிறது. எனவே, வருச நாட்டில் ஆரம்பித்து ஆற்றங்கரை வரை, வைகை நதியின் இரண்டு பக்கமும் ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் தேடுதலை மேற்கொண்டோம். இந்தக் கள ஆய்வில் மண்மேடுகள், முதுமக்கள் தாழி, பெருங் கற்கால அடையாளங்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள் போன்ற தொல்லியல் சான்றுகள் 293 இடங்களில் கிடைத்தன. இதில், மூன்று மீட்டர் உயரம் கொண்ட மண் மேடாகவும், மூன்றரை ஏக்கர் சுற்றளவும் 80 ஏக்கர் பரப்பும் கொண்ட தாகக் கீழடியிலுள்ள பள்ளிச் சந்தைத் திடல் தொல்லியல் மேடு இருந்தது.

பழங்காலத் தொல்லியல் சான்றுகள் இருக்கும் இடத்தையும் ஓர் ஊர் இருந்து அழிந்து போனதையும் தொல்லியல் மேடு என அழைப்போம். இவ்வளவு பெரிய தொல்லியல் மேடு கிடைப்பது மிகவும் அரிது. இந்த இடம், மதுரை-ராமேஸ்வரம் இடையேயான பழங்கால வணிகப் பாதை யில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. எனவே, கீழடியில் அகழாய்வு செய்வது என முடிவு செய்தோம். முறையாகத் தொல்லியல் மேட்டை ஆராய்ந்து அளந்த பின் பலவகைக் கட்டங்களாகப் பிரித்தோம். 10இற்கு 10 மீற்றர் சதுர பரப்பளவில் 4இற்கு 4 மீற்றர் அளவில் குழிகளைத் தோண்டத் தொடங்கினோம்.

**கேள்வி - நீங்கள் தொடங்கியது முதல் இதுவரை கீழடியில் எட்டு கட்ட அகழாய்வுகள் நடந்ததுள்ளன. இதுவரை கிடைத்துள்ளவற்றின் அடிப்படையில் கீழடி அகழாய்வு காட்டும் உண்மை என்ன? வரலாற்றின் அதன் முக்கியத்துவம் என்ன என்று சொல்ல முடியுமா?**

**பதில்** - தமிழ்நாட்டில் இதுவரை நடந்துள்ள அகழாய்வுகளில், இங்கே ஒரு நகர நாகரிகம் இருந்ததற்கான ஆதாரங்களை முதலில் கொடுத்துள்ளது கீழடிதான். இதனால், இதுபோல் இன்னும் பல ஆய்வுகளைச் செய்ய கீழடி நமக்கு ஒரு தொடக்கமாக இருக்கிறது. சங்க காலத்தின் பரப்பளவை முழுமையாக நாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் கீழடி போல் இன்னும் பல ஆய்வுகளை

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

Get in touch for your perfect home!



PUSHPA KANAGARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 647.786.3436
pushpakana33@gmail.com
HOMELIFE HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215

Vlambaram -June 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-05-31 5:04 PM Page 8



# நாமும் நமது இல்லமும் 678

## ஆதன வியாபாரத்தில் ஏற்பட்டுள்ள மந்தநிலை



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

பொதுவாக ஆதன வியாபாரம், இளவேனிற் காலத்தில் (Spring season) சிறப்பாகக் காணப்படும். இந்த ஆண்டிற்கான இளவேனிற்காலம் தொடங்கி ஏறக்குறைய 2 மாதங்கள் முடிவடைகின்றன. எதிர்பார்த்தது போல ஆதன வியாபாரம் இருக்கவில்லை. ஆதன வியாபாரம் மற்றைய காலங்களைவிட மிகவும் மந்தமாகவே காணப்படுகின்றது.

இப்பொழுது புதிய மத்திய அரசு ஆட்சியில் இருப்பதால், கனடியர் ஒரு நிலைப்பாட்டை எடுக்கக் கூடியதாக உள்ளது. இதனால் பல புதிய வாங்குவோரை ஆதன வியாபாரத்தில் இறக்கக்கூடும். அத்துடன் மேலும் பல ஆதனங்கள் சந்தைப்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடைபெறவில்லை.

ஏப்ரல் 16, 2025இல் கூடிய மத்திய வங்கியின் ஆளுநரும், அவரின் சகாக்களும் வட்டி வீதத்தில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் ஏற்கனவே இருந்த 2.75% என்ற வட்டி வீதத்திலேயே விடப்பட்டுள்ளது. முதன்மை வட்டிவீதம் (prime rate) 4.95%.

இதற்கு திரு. மெக்கலாம் (Governor, Bank of Canada) கூறிய காரணம், நாளுக்கு நாள் வெவ்வேறான தகவல்களை வெளிப்படுத்தும் அயல்நாட்டு ஜனாதிபதியினால் பொருளாதார நிலைமையை சிறப்பாகக் கணக்கிட முடியாமல் உள்ளதாகத் தெரிவித்துள்ளார். அத்துடன்



கனடா மீதான சுங்கவரியின் பெறுமதியும் வெவ்வேறாகக் கூறப்படுகின்றது. இதனால் கனடியப் பொருளாதாரமும், நெருக்கடியில் காணப்படுகின்றது. ஸ்திரமற்ற நிலையில் காணப்படுகின்றது.

பொருளாதாரச் சுருக்கம் (Recession) ஏற்படுமா என்ற கேள்வியும் ஏற்படுகின்றது.

கனடா ரீதியில் ஆதன வியாபாரமும், கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, இறங்கியே உள்ளது.

எனினும் கனடாவின் கிழக்கு மாகாணங்கள், கியூபெக் மற்றும் மேற்கு மாகாணங்களிலும் பிரிட்டிஷ் கொலம்பியா தவிர மற்றைய மாகாணங்களில் ஆதன வியாபாரம் சிறப்பாகக் காணப்படுகின்றது. எனினும், இந்நிலைமை எவ்வாறு இருக்குமென எதிர்காலத்தில்தான் தெரிய வரும்.

இன்றைய நிலைமையில் Credit Card மாதாந்தக் கொடுப்பனவிலும், அடமானக் கடன் மாதாந்தக் கொடுப்பனவிலும் கனடியர் பின்தங்கிய நிலையில் இருப்பதனை இன்றைய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக ஒன்றாரியோவில் வாழும் இளையோரின் நிலைமையே இவ்வாறு காணப்படுகின்றது. இதனால் இவர்கள் தமது மாதாந்தச் செலவை கட்டுப்படுத்துகின்றனர்.

இந்நிலைமையினால் வியாபார நிலையங்களும் தமது மாதாந்தக் கொடுப்பனவுகளை செலுத்துவதில் சிரமம் ஏற்படுவதாகத் தெரிய வருகின்றது.

2022ஆம் ஆண்டிற்குப் பிறகு 2025ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் கனடிய மக்களின் செலவு குறைந்துள்ளது. அத்துடன் மாதாந்தக் கொடுப்பனவுகளையும் மிகக் குறைத்தே செலுத்துகின்றனர்.

2022இற்குப் பின்னர் ஏற்பட்ட வட்டிவீத அதிகரிப்பும், பணவீக்கமுமே முக்கிய காரணம்.

கடந்த ஒரு வருடமாக வட்டி வீதத்தில் குறிப்பிட்டளவு இறக்கம் ஏற்பட்டுள்ள போதிலும் இதன் தாக்கத்தைக் காண முடியவில்லை.

குறிப்பாக 14இற்கும் 24இற்கும் இடைப்பட்ட வயதினரில் 14% தொழில் புரியாமல் (Unemployment) உள்ளனர். இவர்களின் எண்ணிக்கை மொத்தத் தொழில் கிடைக்காமல் உள்ளவர்களுடன் ஒப்பிடும்போது ஏறக்குறைய இரண்டு மடங்காகும்.

அடமானக்கடன் செலுத்தாமல் உள்ளவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 72% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமை 2016-2017இல் ஏற்பட்ட நிலைமைப் போலவே காணப்படுகின்றது. எனினும், புதிதாகப் பதவியேற்றுள்ள லிபரல் அரசு இந்நிலைமையைக் கட்டுப்படுத்த போதியளவு முன் நடவடிக்கைகளை எடுப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# என்பிபி அரசைத்...

4ஆம் பக்கத்தொடர்ச்சி

உயர்த்தப் போகிறது. சர்வதேச நாணய நிதியம் அதற்கு அழுத்தங்களைக் கொடுக்கிறது.

உப்பு விலை கிலோ 350 தொடக்கம் 500 ரூபாய்வரை சென்று விட்டது.

சுமார் 30, 35 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்க்கு விற்ற உப்பு இப்பொழுது 500 ரூபாய்க்கு விற்கிறது என்றால், எந்த அளவுக்கு அதன் மதிப்பு உயர்ந்து இருக்கிறது என்பதைக் கணிப்பது கடினம் அல்ல.

இந்தளவுக்கும் அம்பாந்தோட்டை, மன்னார், புத்தளம், ஆனையிறவு என நான்கு பிரதான உப்பளப் பிரதேசங்களைக் கொண்டிருக்கின்ற நாடு இலங்கை.

இலங்கையின் தேவைக்கு அதிகமான உப்பை உற்பத்தி செய்யக்கூடிய வசதிகள் இருக்கின்றன. ஆனால் இறக்குமதி செய்யப்படுகின்ற நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

காலநிலையைக் காரணம் காட்டி அரசாங்கம் தப்பிக்க முயன்றாலும், இதற்குப் பின்னால் ஒரு மாபியா இருக்கிறது.

அந்த மாபியாவை அடக்க முடியாமல் அரசாங்கம் திணறுகிறது. அரசாங்கத்துக்கும் இதில் பங்கிருப்பதாகச் சொல்லப்பட்டாலும் அது நிரூபிக்கப்படவில்லை.




அரிசியின் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு அரசாங்கம் என்னதான் முயன்றாலும், அது முடியவில்லை.

கிலோ 210 ரூபாவுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டபோதும், அரிசி இப்போதும் கூட 280 ரூபாவுக்கு மேலேயே விற்கப்படுகிறது.

விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாமல், பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை மீட்க முடியாமல், இருக்கின்ற என்பிபி அரசாங்கம், மக்கள் மத்தியில் செல்வாக்கை இழக்கத் தொடங்கிவிட்டது. மிகக் குறுகிய காலத்தில் அது இப்படியான ஒரு நிலைக்கு வந்தது அதன் துரதிஷ்டம் என்றே கூற வேண்டும்.

# மிரள வைத்த...

6ஆம் பக்கத்தொடர்ச்சி

வேண்டிய பொறுப்பு தமிழருக்கு இருக்கிறது. அதற்கு அவர்கள் தயாராகவே இருக்கின்றனர்.
ஆனால், அது பொய் என்று கூறுகின்ற அரசாங்கம், அதனை நிரூபிப்பதற்கான சூழலை உருவாக்கத் தயாராக இல்லை.

குற்றச்சாட்டை நிரூபிக்க அல்லது பொய் என்று நிரூபிப்பதற்கான சூழலை உருவாக்கிக் கொடுக்காமலேயே குற்றச்சாட்டை கூறுகின்ற தரப்பின்மீது அச்சுறுத்தல் விடுகிறது அரசாங்கம்.

இனஅழிப்பு என்ற பதத்திற்கான வரையறைகள் குறித்த சர்ச்சைகள் இருந்தாலும் தமிழ் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழர் குறிவைத்துத் தாக்கப்பட்டனர், படுகொலை செய்யப்பட்டனர், கொன்று குவிக்கப்பட்டனர், காணாமல் ஆக்கப்பட்டனர். இவை எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அப்படியிருக்க அவ்வாறு நடக்கவே இல்லை எனச் சாதிக்க முனைகிறது என்பிபி அரசாங்கம்.

இந்தவிடயத்தில் அரசாங்கம் இந்தளவுக்கு கீழ் இறங்கிப் போகும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

இனப்படுகொலை இடம்பெற்றதாக குற்றம் சாட்டுபவர்களின் வாயை அடைக்கவே அது முற்படுகிறது. இது மக்களின் ஜனநாயக உரிமையின் மீதான ஒரு தாக்குதல்.

இவ்வாறான அச்சுறுத்தல்கள் இலங்கைக்கு எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.



அடுத்த மாதம் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள சூழலில் இவ்வாறான கருத்துகளின்மூலம் அரசாங்கம் தனது உண்மை சொரூபத்தை உலகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்கிறது. அரசாங்கத்தின் இவ்வாறான நிலைப்பாடுகளே, முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல்களில் தமிழ் மக்கள் பேரளவில் திரண்டு வருவதற்குக் காரணம்.

Vlambaram -June 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-05-31 5:04 PM Page 9



# நல்வாழ்வு பயிற்சி என்றால் என்ன? – பகுதி 4

உஷா மதிவாணன்
M. A (Social Work)
அலைபேசி: 647.808.2904

## Life Coaching

தத்துவஞானி ஓஷோவின் ஒரு மேற்கோளைக் காட்டி இந்த வார நல்வாழ்வுப் பயிற்சிக் கட்டுரைத் தொடரினை ஆரம்பிக்க விளைகிறேன்.

"இவ்வுலகில் மனிதர்களின் மிகப்பெரிய பயம் அல்லது மனதில் ஆழமாக பதிந்திருக்கும் பயம் எதுவெனில் தன்னைக் குறித்து மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணமே! இந்த மற்றவர்கள் குறித்த பயத்தை நாம் முறியடிக்கும் அந்தக் கணத்தில் ஆட்டு மந்தையில் ஒருவராக நீங்கள் இருப்பதில்லை. ஒரு சிங்கமாக மாறுகிறீர்கள்! உங்களுடைய மனதில் ஒரு பெரும் கர்ஜனை எழுகிறது. அது உங்களது விடுதலையின் கர்ஜனையாகும்!"

- ஓஷோ

இந்த மேற்கோளை உள்வாங்கி, அதைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்தோமானால் நமது பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணம் மற்றவர்கள் என்று நாம் நினைக்கிறோம் என்பதே! - இந்த மற்றவர்கள் என்பது நமது பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள், கணவன் அல்லது மனைவி, நமது பிள்ளைகள், நெருங்கிய சொந்தங்கள், நண்பர்கள், அக்கம் பக்கத்து வீடுகளில் வாழ்வோர்கள், கூட வேலை செய்பவர்கள் என அனைவரும் இந்த மற்றவர்கள் என்ற வார்த்தையில் அடங்குவோர் ஆகும்.

நம்மில் அநேகமாக அனைவரும் இந்த மற்றவர்களின் அளவுகோலுக்கு அல்லது அவர்களது அளவுகோல் என்று உத்தேசித்து அதற்கு ஏற்றவாறு நமது வாழ்வை அமைத்துக் கொள்ளவே நேருகிறது.

நமது இளம் வயதில் நமது சமூகம் அல்லது மற்றவர்கள் போடும் அந்த சித்திரத்திற்குள் நமது வாழ்க்கை இயல்பாக அமையப் பெறுகிறது. ஆனால் இது குறித்து நாம் சிறிது சிந்தித்தோமானால், நம்மில் அனைவரும் அந்தச் சித்திரத்திற்குள் அடங்கி இருப்பதில் எப்பொழுதும் மகிழ்ச்சியை அடைவதில்லை. இதை நான் ஏன் கூறுகின்றேன் என்றால் நம்மில் அனைவரையும் நோக்கி ஒரு கேள்வி கேட்போமேயானால் அந்தக் கேள்விக்கு வரும் பதில் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. "உங்களுக்கு வாழ்க்கையில் மிக முக்கியமான தேவை என்ன?" என்பதுதான் அந்தக் கேள்வி. "மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் இருக்க விரும்புகிறேன்" என்பதே அனைவரின் பதிலாகவும் உள்ளது. இதில் தொக்கி நிற்கும் அர்த்தம் என்னவெனில் நாம் தற்போது மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் இல்லை என்பதுதான். நாம் அனைவரும் பலவிதமான கட்டுக்களுக்குள் பிணைக்கப்பட்டு இருப்பதாகவே நினைத்து வருந்துகிறோம். இந்த நிலையை சற்று உற்றுப் பார்த்தோமேயானால் நமக்கு ஒரு விடயம் தெளிவாகப் புரியும். இந்தக் கட்டுக்கள் அனைத்தும் நாமே விரும்பிப் போட்டுக் கொண்டிருப்பவைதான். இவை நமக்கு பெரும் வலியையும், வேதனையையும் தந்தாலும் அவற்றை உடைத்தெறிந்து வெளிவருவதில் நமக்கு மிகுந்த தயக்கங்கள் உள்ளன. இந்தத் தயக்கங்களைத்தான் ஓஷோ தனது மேற்கோளில் சுட்டிக் காட்டுகிறார்.

எனக்குப் பிடித்தமான 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சங்கப் பாடலின் மூன்றாவது வரியான 'நோவதும் தணிவதும் அவற்றோர் அன்ன' என்பதற்கான அர்த்தம் இந்த மேற்கோள் மூலம் நமக்குத் தெளிவாக விளங்கும். நமது துன்பங்களும், துன்பங்களில் இருந்து விடுபடலும் மற்றவர்கள் மூலமாக வருவதில்லை என்பதுதான் அந்த அர்த்தம். இது குறித்து நன்கு சிந்தித்துப் பாருங்கள் நண்பர்களே!

நமது நல்வாழ்வுப் பயிற்சியின் வாடிக்கையாளர் சென்ற வாரத்தில் தனது வாழ்வின் சலிப்பினைப் போக்க துணைவியாருடன் தனக்கு மிகப் பிடித்தமான இசைப் பயிற்சியை மீண்டும் துவக்கப் போவதாக பயிற்சியாளரிடம் கூறிச் சென்றார். இரண்டு வாரங்கள் கழித்து அடுத்த அமர்வுக்கு வந்த அவர் உற்சாகத்துடன் வரவில்லை. காரணம் அவரும், அவரது மனைவியாரும் அந்த இசைப் பயிற்சியை ஆரம்பிக்கவே இல்லை. அதற்கான எந்த வகையான முன்னெடுப்புகளையும் அவர்கள் எடுக்கவில்லை. ஏனெனில் முதலில் தங்களது பிள்ளைகள், நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் இந்த முன்னெடுப்பைக் குறித்து அவர்கள் கலந்தாலோசிக்க முற்பட்டனர். கிட்டத்தட்ட அனைவருமே "வயதான காலத்தில் எதற்கு இந்த வேலை? இதற்கு மேல் இதில் நீங்கள் என்ன சாதிக்க போகிறீர்கள்? இவற்றால் என்ன பலன் அடையப்போகிறீர்கள்?" என்று அவர்களைச் சற்றுக் கேலியாகவும், ஏதோ பைத்தியக்கார வேலையை செய்வது போலவும் எதிர்வினை ஆற்றி விட்டார்கள்.

மற்றவர்களின் எதிர்பார்ப்புக்கு மதிப்பளித்தே வாழ்ந்து பழகிவிட்ட நமது வாடிக்கையாளர் அந்த நேரத்தில் தனது தேவை என்ன என்பதை முழுக்க மறந்து விட்டார். அவரது வாழ்வின் சலிப்பினைக் குறித்து அவரால் மற்றவர்களுக்கு விளக்கிக் கூற முடியவில்லை. அதைக் காட்டிலும் தனது பிரச்சினை மற்றவர்களுக்கு விளங்கவில்லை அல்லது அதை விளங்கிக்கொள்ள அவர்களுக்கு மனம் இல்லை என்பதை அவரால் உணர முடியாததால் அந்த முயற்சியை அப்படியே கைவிட்டு விட்டார். இசை என்ற உடன் முழுமையாக மலர்ந்த அவரது மனம் சோர்வடைந்து விட்டதால் மேற்கொண்டு அந்த முயற்சியைத் தொடரவில்லை.

நல்வாழ்வு பயிற்சியாளர் இந்த நிலைமையை எவ்வாறு கையாண்டு வாடிக்கையாளருக்கு இருந்த குழப்பத்தினை தீர்க்க முற்பட்டார் என்பதை வரும் வாரத்தில் பார்க்கலாம்.

Drieberg College Chavakachcheri
Alumni Association – Canada
வாழ்வின் ஒளி



1875 - 2025
Celebrating 150 Years
of Excellence in Education

We are delighted to announce that Drieberg College will be celebrating its 150th anniversary, a significant milestone in our institution's history. We cordially invite you to join us, to commemorate this momentous occasion.

Venue: JC's Banquet Hall, 1686 Ellesmere Rd, Toronto, ON M1H 2V5
Date: Saturday, June 14, 2025 Time: 6:00 PM

**Ticket: $50.00 per person**

**Note:** Parking underground Level P1 and Reception in Level 'G"

**Contacts:** Mohan Devabalan - 416-274-2169
Mathialagan Rajagopal - 416-277-1067
Vasuki Devadas - 416-266-1234
Regi Thevaranjan - 647-740-2965
Gunam Hunt - 905-472-0379

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS...

சமூக உளவளம் பேணும் தொடர் - 97
Psychosocial Educational Series - 97

VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE

02 June 2025 (Monday)
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 4:30a.m - 6:30am (Tuesday)

Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588



நிச்சயமற்ற காலங்களில் நம் உணர்ச்சிகளை எவ்வாறு நிர்வகிப்பது?
How We can Manage our Emotions during Uncertain Times?

Satha Vivekananthan
Violence against Women Counsellor,
Psychotherapist (Family Service Toronto)

Join us via zoom: CLICK HERE or go to link below in the email

Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!



Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172

VASANTHAM 647-374-4685
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW VASANTHAM.CA

# நானிலம் போற்றும் நட்பு - 67



– அகணி –
authorakani@gmail.com

இப்பொழுது இன்னா நாற்பதின் இருபத்து ஐந்தாம் செய்யுளிற்குச் செல்வோம்.

"நட்டா ரிடுக்கண்கள் காண்டல் நனியின்னாஉ
ஒட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்னாமு
கட்டில்லா மூதா ருறையின்னா வாங்கின்னா
நட்ட கவற்றினாற் சூது."

இந்தச் செய்யுளில் 'ஒட்டார்' என்ற சொல் பகைவரது என்றவாறும், 'உறை' என்ற சொல் 'வாழ்தல்' என்றவாறும் கருதவேண்டும் என்று உரையாசிரியர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

இந்தச் செய்யுளின் முதலடியில் "நட்டா ரிடுக்கண்கள் காண்டல் நனியின்னாஉ" என்று வருவது நட்புக் கொண்டோருடைய துன்பங்களைப் பார்ப்பது துன்பத்திற்குரியது என்பதைச் சொல்லுகின்றது. எங்கள் நண்பர்களிற்கு வருகின்ற துன்பமும் நமக்கு வருவதுபோல துன்பத்தைக் கொடுப்பது வழக்கம். இது எக்காலத்தும் பொருந்தும் ஒரு கூற்றாக உள்ளது. எமக்குப் பிடிக்காத பகைவர்கள் கொள்ளுகின்ற பெருமிதம்கூட எமக்கு துன்பத்தையே தரும் என்றவாறு புலவர் செய்யுளின் இரண்டாம் அடியில் குறிப்பிடுகின்றார். பகைவர் என்ற நிலை வந்துவிட்டால் நமக்கு எரிச்சல் ஊட்டுவதற்காகவே அவர்கள் பெருமிதம் கொள்வதாகக் காட்டிக்கொள்ளும் நிலை நமது சமூகத்தில் இருக்கத்தான் செய்கின்றது. இந்தச் செய்யுளின் மூன்றாம் அடியில் "கட்டில்லா மூதா ருறையின்னா வாங்கின்னா" என்று வருவது உறவினர் இல்லாத பழைய ஊரில் வாழ்வோர் எதிர்கொள்ளும் இன்னலைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இது எங்கள் தாயகத்தில் வாழும் மக்களின் துயரத்தைக் குறிப்பிடுவதாக உள்ளது. எமது தாயகத்தில் காணப்படும் ஊர்களிலிருந்து புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளுக்கு மக்கள் புலம்பெயர்ந்து விட்டனர். அங்குள்ளவர்களும் இடம்பெயர்ந்து பிற இடங்களில் வாழ்கின்றனர். பழைய ஊர்களில் தனித்து வாழ்வோர் மிகவும் துன்பத்துடன் தமது நாளாந்த வாழ்க்கையில் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இன்றைய காலத்தில் எமது தாயக மக்களின் நிலைமையைப் புலவர் தீர்க்க தரிசனமாகக் கூறிவிட்டாரா அல்லது இந்த நிலைமை அந்தக் காலத்திலும் காணப்பட்டதா என்ற வினாவிற்கு விடை காணும் பொறுப்பை வாசகர்களாகிய உங்களிடமே விட்டு விடுகின்றேன். புலவர் ஈற்றடியில் "நட்ட கவற்றினாற் சூது" என்று குறிப்பிட்டுச் செய்யுளின் முதல் மூன்றடிகளில் குறிப்பிட்டதைப் போன்றவாறு சூதாடுவதும் துன்பத்திற்குரியது என்று குறிப்பிட்டுள்ளார். சூதாட்டத்தினால் ஏற்படக்கூடிய வலியை மகாபாரதத்தில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தக் காலத்திலேயும் சூதாட்டத்தினால் அழிந்தோரின் நிலைமைகளை நிறையவே காணத்தான் செய்கின்றோம். ஆனாலும் இவ்விடயத்தில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நாங்கள் வாழுகின்ற கனடா நாட்டில் குறிப்பாகப் பல நாடுகளிலிருந்தும் குடியேறியுள்ள மக்களிடையே சூதாட்டப் பழக்கம் அதிகம் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. முதியோரிடமும் சூதாட்டப் பழக்கத்திற்கு அடிமையாகும் தன்மை அதிகம் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதாற்காக பல்வேறு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சூதாட்டத்திற்கு அடிமையாவதன் காரணமாக தங்கள் பொருளாதார நிலை இழந்து, குடும்பச் சச்சரவுகள் ஏற்பட்டு மனநிலையும் பாதிக்கப்பட்டு வாழ்கின்ற பலரை நாம் சமூகத்தில் காண்கின்றோம். பொழுது போக்காக எப்போதாவது சூதாட்டத்திற்குப் போவதை ஏற்றுக் கொண்டாலும் இதற்கு அடிமையாகாது வாழக்கூடிய மனக்கட்டுப்பாடு இல்லாதவர்கள் சூதாட்டத்தை முற்றாகத் தவிர்ப்பதே சிறந்த செயற்பாடாகும். புலவரின் செய்யுளில் இவ்விடயமும் சேர்க்கப்பட்டிருப்பது ஒரு நல்ல விடயமாகும்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றிதொண்ணூற்றிஐந்தாவது பாடலைக் கவனிப்போம்.

இது தேரதரன் என்னும் புலவர் பாடிய செய்யுள். மாலைப் பருவத்தில், தன் காதலன் வராமலிப்பதைக் கண்ட தலைவி, தன் துயரத்தை எடுத்துரைத்தது. இது நெய்தல்திணை சார்ந்தது.

தலைவி தனித்து நிற்கின்றாள். தலைவன் பிரியும்போது மாலைக் காலத்திலே வந்து விடுகிறேன் என்று வாக்களித்து விட்டுத்தான் போனான். ஆனால் வரவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள் தலைவி. மாலைக் காலமும் மறைந்து கொண்டிருக்கிறது. இருட்டு நேரமும் வரப்போகின்றது.

காதலன், தான் சொல்லிய சொல்லை நிறைவேற்றவில்லையே என்ற கவலை ஒருபுறம். அவனோடு சேர்ந்திருக்கும் இன்பத்தைப் பெறாமல், தனித்திருக்கின்றோமே என்ற துக்கம் ஒரு புறம். இவ்விரண்டிலும் நெருக்கப்பட்ட தலைவி, தன் மன வேதனையைத் தோழியிடம் உரைத்தாள். இந்த நிகழ்ச்சியைச் சொல்லுவதுதான் இச்செய்யுள்.

"சுடர் சினம் தணிந்து குன்றம் சேரப்
படர் சுமந்து எழுதரு பையுள் மாலை,
யாண்டுளர் கொல்லோ, வேண்டுவினை முடிநர்
'இன்னாது, இரங்கும்' என்னார் அன்னோ!
தைவரல் அசை வளி மெய்பாய்ந்து ஊர்தரச்,
செய்வுறு பாவை அன்ன, என்
மெய்பிறிது ஆகுதல் அறியாதோரே!"

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

"தோழியே! நம்மைத் தடவிக்கொண்டு வீசுகின்ற இந்தக் காற்றைப் பார். இந்தக் காற்று என் உடம்பின்மேல் உரசிக் கொண்டு அடிக்கின்றது. இதனால் என் அழகு குலைந்தது. நான் இதற்கு முன் அழகாகச் செய்யப்பட்ட பதுமையைப் போலிருந்தேன். இப்பொழுது இக்காற்றுப் பட்டதனால் என் உடலின் தோற்றம் வேறுபட்டு விட்டது. எனது முன்னைய அழகு மறைந்து விட்டது.

என்னுடைய இந்த நிலையை அவர் அறிந்து கொள்ளவில்லை. தான் விரும்பிய செயலை முடிப்பதற்காக என்னை விட்டுப் பிரிந்து போனார். கதிரவனும் தன் வெப்பந் தணிந்தான். அத்தமன கிரியை அடைந்து விட்டான். துன்பத்தைத்தரும் மாலைப் பொழுது வந்துவிட்டது. இது பிரிந்தவர்கள் தங்கள் காதலரை நினைக்கும் நினைப்பைச் சுமந்துகொண்டு வந்திருக்கின்றது. இந்த மாலைக் காலத்திலே திரும்பி வந்து விடுவதாக வாக்களித்துச் சென்ற என் காதலர் எங்கிருக்கின்றாரோ? இந்த மாலைக்காலம் துன்பத்தைத் தருவதாகும். இதனால் என் காதலி வருந்துவாள் என்று நினைக்காமல் இருக்கின்றாரோ அவர். அய்யோ இதற்கு நான் என் செய்வேன்.'

இதுவே இச்செய்யுளில் அமைந்திருக்கும் பொருள். தலைவியின் கூற்று.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றிதொண்ணூற்றிஆறாவது பாடலைக் கவனிப்போம்.

அன்புக்குரியவர்கள் செய்யும் அனைத்தும் இன்பந் தரும். அவர்கள் எந்தப் பொருளைக் கொடுத்தாலும் அது அழகுள்ளதாகக் காணப்படும் அரும்பொருளாகப் போற்றப்படும். அவர்கள் எப்படிப் பேசினாலும் அப்பேச்சிலே இனிமை நிரம்பியிருப்பதாகவே தோன்றும்.

நமது அன்பையிழந்தவர்கள் செய்கை இதற்கு மாறாகக் காணப்படும். அவர்கள் செய்கை, பேச்சு, பண்டம் எல்லாம் கசப்பாகவே தோன்றும். இது நாம் அனுபவத்தில் அறியும் உண்மை. நம்மால் நேசிக்கப்படாதவர்கள் உள்ளன்புடன் செய்யும் வினைகளும் நமக்கு வெறுப்பையே தரும். இந்த உண்மையை அடக்கிக் கொண்டிருக்கும் செய்யுள் இது.

தலைவி ஊடியிருந்தாள். அவளை மகிழச் செய்வதற்கு எண்ணினான் தலைவன். தலைவியின் பிணக்கைத் தவிர்த்துத் தன்னுடன் கூடி மகிழச் செய்ய வேண்டும் என்று தோழியை வேண்டிக் கொண்டான் அவன். அப்பொழுது தோழி அவனுக்கு மறுமொழியுரைத்தாள்.

"வேம்பின் பைங்காய் என்தோழி தரினே,
'தேம் பூங்கட்டி' என்றனிர் இனியே,
பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்.
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்,
'வெய்ய உவர்க்கும்' என்றனிர்
ஐய! அற்றால் அன்பின் பாலே"

> "Find a group of people who challenge and inspire you; spend a lot of time with them and it will change your life."
> – Amy Poehler–

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

"நீர் என் தலைவியிடம் அளவற்ற அன்பு வைத்திருந்த அந்தக் காலம் வேறு. அப்பொழுது என் தலைவி ஒரு வேப்பங்காயைக் கொடுத்தாலும் அதை ஆர்வத்தோடு ஏற்றுக் கொள்வீர்! "இது வேப்பங்காய் அன்று. இனிமை நிறைந்த வெல்லக் கட்டி. ஆ! ஆ! எவ்வளவு இனிமை!" என்று சொல்லி அதைச் சுவைத்துச் சுவைத்துத் தின்பீர்.

இப்பொழுதோ பாரிவள்ளலின் பறம்பு மலையிலே, குளிர்ந்த சுனையிலே உள்ள தெளிந்த நீரைத் தந்தாலும், அதுவும் தை மாதத்துக் குளிர்ச்சியான நீரைக் கொடுத்தாலும் அது உமக்குப் பிடிக்கவில்லை. குளிர்ச்சியில்லை சூடாயிருக்கின்றது, இனிமையில்லை உப்புக்கரிக்கின்றது என்று சொல்லுகின்றீர். தலைவரே! உமது அன்பின் தன்மை இப்படியிருக்கின்றது" என்றாள் தோழி. இதுவே இச்செய்யுளில் அமைந்திருக்கும் பொருள்.

இந்த மூன்று பாடல்களிலும் நட்பின் பெருமை நன்கு புலப்படுகிறது.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

Vlambaram -June 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-05-31 5:04 PM Page 11



# பிள்ளைப் பருவத்தின் சொல்லாத வடுக்கள்



**யதுசனா சவுந்தரராசா**
கரவெட்டி – யாழ்ப்பாணம்

சில நினைவுகள் காலத்தோடு கரைந்து போகின்றன, சில கல்மேல் எழுத்துப்போல ஆழமாகப் பதிந்து விடுகின்றன. குறிப்பாக குழந்தைப் பருவ நினைவுகள். பாடல்கள் எதுவும் பதிவேற்றப்படாத புதிய இறுவட்டு போன்றிருக்கும் சிறு பிள்ளையின் மனதில் விதைக்கும் நல்ல விடயங்கள் காலந்தோறும் நிலைத்து நிற்கும். அதுபோலவே இப்பராயத்தில் ஏற்படும் கசப்பான சம்பவங்கள், வலி நிறைந்த அனுபவங்கள் வாழ்நாள் முழுவதும் மனதின் ஓரங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். மனிதன் பிறந்த உடனேயே முழுமையான ஒரு நபராக மாறி விடுவதில்லை. வாழ்வின் போக்கினைப் புரிந்து கொள்ளும் முன்னர் ஏற்படும் அனுபவங்கள் எதிர்காலத்தின் கட்டமைப் பைத் தீர்மானித்து விடுவதோடு அவரது பழக்கவழக்கங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், வெளி உலகை நோக்கும் விதம், பிறமனிதருடன் ஏற்படுத்தும் தொடர்பாடல்கள் மற்றும் சுய மதிப்பீட்டிலும் செல்வாக்குச் செலுத்தும்.

பெரியோர் நினைப்பதை விடவும் அதிகமாகவே சிறுவர்கள் உலகை அவதானிக்கின்றனர். ஒரு சிறிய கேலிப் பேச்சு, உச்சத் தொனியிலான அதட்டல், ஏளனப் பார்வையும் மனதில் நிலைத்த வடுவாக மாறக் கூடும். பிறர் முன்னிலையில் அவமானப்படுத்தப்படல், குற்றஞ்சாட்டப்படுதல், ஒப்பீடு, புறக்கணிப்பு, உடல் மற்றும் உளரீதியான துன்புறுத்தல்கள் வாழ்க்கையின் போக்கையே பாதிக்கக்கூடிய அனுபவங்களாக மாறுகின்றன. குழந்தை உளவியல் ஆய்வுகள் சிறு வயதில் ஏற்படும் அனுபவங்கள் மன அழுத்தம், உடல் ரீதியான பிரச்சினைகள், போதைக்கு அடிமையாதல் போன்றவற்றுக்கு சிறுவர்களை உள்ளாக்குவதாகக் கூறுகின்றன. வேதனைக்குரிய விடயம் என்னவெனில் இப்பாதிப்புக்கள் உச்ச நிலையை எட்டும்வரையிலும் யார் கண்களுக்கும் தெரிவதில்லை.

பல குழந்தைகளும் தம் உணர்வுகளைச் சொல்ல வார்த்தைகளற்றே கடந்து செல்கின்றனர். சிலர் பயம் காரணமாக, சிலர் அறியாமை காரணமாக சொல்லாத காயங்கள் எதிர்காலத்தில் மேலும் ரணமாகி தன்னம்பிக்கையின்மை, தொடர்பாடல் திறனில் பாதிப்பு, பிறர் உடனான சுமுகமான உறவுகளைப் பேணமுடியாமை மற்றும் பொறுப்புக்களில் இருந்து தூர விலகி இருத்தல் போன்ற தாக்கங்களை ஏற்படுத்தம். பள்ளிப் பருவத்தில் தொடர்ச்சியாக அவமதிப்புகளைச் சந்திக்கும் ஒரு பிள்ளை வளர்ந்து பெரியவனான பிறகும் அந்தச் சம்பவத்தின் வடுக்கள் கூடவே வரும். தனது கருத்துகளை முன்வைக்கும் ஆளுமை அற்றவனாகவும் தன்னம்பிக்கை குறைந்தவனாகவும் அவனை மாற்றிவிடக் கூடியது. சிறு வயதில் பாலியல் துன்புறுத்தலை எதிர்கொண்ட குழந்தை அதைக் கூறமுடியாமல் வளர்ந்தால் வாழ்நாள் முழுவதும் அவமானம், பிறர் மீது நம்பிக்கையின்மை, அல்லது தன்னைத் தானே குற்றவாளி எனும் மனநிலையுடன் வாழ வாய்ப்பு அதிகம். அனுபவப் பாடங்கள்தான் ஒரு மனிதனை பலமுடையவனாக்கும் என்பது எல்லா நேரமும் உண்மையல்ல. அது ஒருவனை மிகவும் பலவீனமான நிலைமைக்கும் தள்ளக் கூடியது.

உடலியல் மற்றும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள்பற்றி அதன் தீவிரத் தன்மை காரணமாக வெளியுலகிற்குக் கொண்டுவரப்பட்டாலும் உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் அதன் பின்விளைவுகளின் தீவிரம்பற்றி பெரும்பாலானோரும் உணர்வதில்லை. ஒரு பிள்ளையின் உணர்வுகள் மதிக்கப்படாது இருத்தல் மற்றும் ஏளனம் செய்யப்படும் போது தமது உணர்வுகளை முற்றாகவும் ஒடுக்கத் தொடங்குகின்றான். வெளி உலகிற்குத் தம்மைப் பொருத்திக் கொள்ளத் தடுமாறுகின்றான். “பேசாதே”, “அது ஒன்றும் பெரிய விடயம் இல்லை” போன்ற வார்த்தைகள் ஒரு குழந்தையின் உள்ளுணர்வுகளை ஒடுக்கக் காரணமாகின்றது. இதுவே பிற்காலத்தில் எப்போதும் பெறாத அன்பும் ஆதரவும் கிடைக்கும் பட்சத்தில் அதற்காக எதையும் இழக்கும் மனநிலைக்கும் உள்ளாகின்றனர்.



ஒரு குழந்தை எதிர்கொள்ளும் மிகக் கொடிய அனுபவங்களில் ஒன்று பாலியல் துஸ்பிரயோகம். அதுவும் பலசமயங்களில் இது வெளிக்கொணரப்படாது போகும். அந்தக் குழந்தைகள் ஒருபுறம் இதன் விளைவுகளால் வருந்துகையில் இன்னொரு புறம் யாரிடமும் தம் துயரை சொல்ல முடியாத ஏமாற்றத்துடன் வாழும். மொழி தெரியாததால் அல்ல. அவமானம், பயம், சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள் என்ற எண்ணம் மற்றும் தண்டனைகளுக்குப் பயந்தே. பல சந்தர்ப்பங்களில் குற்றவாளிகள் பரிச்சயமானவர்கள்தான். உறவினர், நண்பர், அயலவர் அல்லது தெரிந்தவர். பெற்றோர் பெரும்பாலும் தமது குழந்தை பாதுகாப்பாக இருப்பதாகவே நம்புகின்றனர், ஆனால் அந்த நம்பிக்கையே சிலசமயம் அபாயமாக மாறுகின்றது. பெற்றோருக்கு இருக்கும் நம்பிக்கை குழந்தைகளின் மௌனத்துக்குக் காரணமாகி விடுகின்றது. அந்த ஒரு மௌனம் வாழ்நாள் முழுவதும் சுமையாகி விடும்.

பிற மனிதர்மீது பயம், தொடுகைக்கு பயப்பிடுதல், நெருங்கிய உறவுகளிடையே நம்பிக்கை வைப்பதற்குத் தயக்கம், சுய வெறுப்பு, சிறு அதட்டல் தொனிக்கும் ஒடுங்கிப் போய் விடுதல் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இவை ஒரு குழந்தையின் தனிப்பட்ட இயல்புகள் அல்ல, மாறாக நீண்டகாலமாக மனதினுள் நடக்கும் போரின் மாறா ரணங்களின் வெளிப்பாடாக இருக்கலாம். கொடியவன் எப்போதும் அசுர முகம் தரித்து வருவதில்லை. சில நேரங்களில் அவர்கள் பாசமாக நடந்து, பரிசுகள் கொடுத்து குடும்பத்தினதும் குழந்தையினதும் நம்பிக்கையை சம்பாதித்தவர்கள்தான். பின்னாளில் இதனையே ஆயுதமாகக் கொண்டு தம் கொடூர முகத்தை அரங்கேற்றுகின்றனர். பாதிக்கப்பட்ட குழந்தை தம் துயரை வெளிக்கொணர முடியாது கோபம், திடீர் அமைதி, தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ளல், அல்லது அளவுக்கு மீறிய பயம், எதிர்ப்புத் தன்மை போன்றவற்றை வெளிப்படுத்தும். ஆனால் பல சந்தர்ப்பங்களில் இவை சாதாரண மனவெழுச்சிகளாகவோ அல்லது நடத்தைப் பிறழ்வுகளாகவோ கடந்து செல்லப்படுகின்றன. அது ஒரு மௌன அழுகை; யாருக்கும் கேட்பதில்லை. இத்தகைய நிகழ்வுகள் உளவியல்ரீதியில் ஏற்படுத்தும் பாதிப்பினை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இது ஒரு நொடியில் நடந்து முடிந்துவிடும் துர்நிகழ்வு அல்ல. முழு வாழ்க்கைக் காலத்தின் போக்கையே வடிவமைக்கக்கூடியது. இதன் பாதிப்பு ஒருவரை எல்லா விடயத்திலும் விழிப்புணர்வோடு இருக்கத் தூண்டுகின்றது. எப்போதும் பயம், எப்போதும் வெளி உலகில் இருக்கும் பாதுகாப்பு பற்றி அச்சம். நிலைத்த குற்ற உணர்ச்சி, அது தம் தவறு என எண்ணி மனதளவில் அழுத்தமடைந்து விடுகின்றனர். தம் உடலை தாமதாய் உணராமல் வெளியில் இருக்கும் ஒரு சதைக்கூடாகத் தோன்றும், திடீர் எண்ண ஓட்டங்கள் வாழ்வின் தற்போதைய கணத்தை மாயையாகத் தோன்ற வைக்கும். தூக்கமின்மை, தூக்கத்தின் போதான துர்க்கனவுகள், உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதில் சிக்கல் என இவ்வரிசை நீண்டே செல்லும். வேதனையான விடயம் என்னவெனில் பலர் இவ்வடுக்களை வெளியில் சொல்வதில்லை. சிறு பிள்ளையாக இருந்தபோதிலும் சரி, வளர்ந்த போதிலும் சரி, வாழ்நாள் முழுவதும் சுமந்து செல்லும் மௌன ஓலமே இது.

தம் பிள்ளைகளை பாலியல் சீண்டல்களில் இருந்து பாதுகாக்கும் பிரதான பொறுப்பு பெற்றோருடையது. உணவும் உறைவிடமும் கல்வியும் வழங்குவது மட்டுமே பெற்றோரின் கடமை அல்ல. அவர்களுக்கு உணர்வுப் பூர்வமாகக் கைகொடுக்கக் கூடியவர்களாக, குழந்தைகள் தம் எண்ணங்களைத் தைரியமாகக் கூறக்கூடிய இடைவெளி வழங்கி எப்போதும் செவிமடுப்பவர்களாக, வீட்டில் மட்டுமன்றி வெளியிலும் அவர்கள் பாதுகாப்பாக உணர்வதை உறுதிப்படுத்தவும் வேண்டும். தம்மைச் சூழ்ந்திருக்கும் பெரியோர்கள் தமது பிரச்சினைகளுக்குப் போதிய கவனம் தராமை ஒரு குழந்தை துன்பத்திற்குள் முடங்கிப் போய்விடக் காரணமாக அமைந்து விடக்கூடாது.

பெற்றோர் தமக்கு எவ்வளவு வேலை இருந்தபோதிலும் தமது பிள்ளைக்கென சிறிது நேரமாவது வழங்கத் தவறக் கூடாது. “இன்றைய நாள் எவ்வாறு இருந்தது?” என தினமும் அன்றைய தினம் நடந்த விடயங்கள்பற்றி தம் பிள்ளையிடம் கேட்க வேண்டும். இது தமக்குப் பிரச்சினை ஏற்படும் நேரத்தில் பெற்றோரிடம் மறைக்காமல் கூறுவதற்கு பிள்ளைக்கு நம்பிக்கையூட்டுவதோடு பெற்றோருக்கும் பிள்ளைக்குமான உறவையும் வலுப்படுத்தும். “யாரும் உன்னிடம் தவறாக நடந்து கொண்டால், என்னிடம் நீ எப்போதும் சொல்லலாம், நான் உன்னை நம்புவேன்” இச்சொற்கள் குழந்தைக்கு நம்பிக்கையைத் தருவதோடு பாதுகாப்பாக உணரச் செய்யும். தங்கள் உடலைப் பாதுகாக்கும் உரிமை, உறவினர்களாக இருந்தாலும் அசௌகரியமாக உணரும் சந்தர்ப்பத்தில் தயங்காமல் “இல்லை” எனச் சொல்லும் தைரியம் என்பவற்றை அவர்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும். நடத்தையில் ஏற்படும் சிறு மாற்றங்களை அவதானிக்க வேண்டும். படுக்கையை ஈரமாக்குவது, சில மனிதர்களைக் கண்டு பயப்பிடுவது, சில இடங்களுக்குப் போவதைத் தவிர்ப்பது என திடீரென ஏற்படும் மாற்றங்களை சிறு விடயங்கள் எனக் கருதி புறக்கணிக்கக் கூடாது. ஒரு பெற்றோராக, குழங்தையின் உணர்வுகளை கடந்த காலத்தில் புறக்கணித்து இருந்தால் அதை ஏற்றுக்கொண்டு மன்னிப்புக் கேளுங்கள். அதுவே மீண்டும் நம்பிக்கையை உருவாக்கும் முதல் படி.

ஒரு சமூகமாக சிறார்களை இப்பாதிப்பில் இருந்து காப்பது அனைவரதும் தலையாய கடமையாகும். குற்றவாளிகளுக்கு வழங்கும் தண்டனை மிகக் கொடியதாயும் அதன்பின் வேறொருவன் இதே தவறைச் செய்யக்கூட நினைக்காத அளவிற்கு அமைய வேண்டும். பாடசாலைகளில் பாலியல் கல்வி என்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். இது இன்றுவரையில் விவாதிக்கப்படும் ஒரு தலைப்பாக இருப்பது அர்த்தமற்றது. இன்றைய இணையமயப் படுத்தப்பட்ட உலகில் இவை தவறான வழியில் சிறுவர்களைச் சேர்கின்றன. பாடசாலையில் அறிவு சார்ந்து கற்பிக்கப்படுவது ஒரு பிள்ளை தன்னை பாலியல் சீண்டல்களிலிருந்து தற்காத்துக் கொள்ளவும் வளர்ந்து வருகையில் அத்தகைய குற்றம் இழைக்காத நன் மனிதனாகவும் இருக்க உதவும். பல சந்தர்ப்பங்களில் சிறுவர் தாம் எதிர்கொள்ளும் பாலியல் தீண்டல்களை வெளியில் சொல்லாமல் இருப்பதற்கு அவர்களின் அறியாமையும் பிரதான காரணம். இவ்வளவு வடுக்களை ஒரு சிறுவனோ சிறுமியோ வெளியில் சொல்ல முடியாது உள்ளுக்குள் அடக்கி வைப்பது எவ்வளவு கொடூரமானது என ஒரு கணம் அனைவரும் உணர்ந்தால்போதுமே, சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தலாம். ஒரு குழந்தை தனது ஆசைகள், கனவுகள், குழந்தைத் தனம் என அனைத்தையும் இழந்து பயத்துடன் மட்டுமே வாழக் கற்றுக் கொள்கின்றது என்றால் அதற்கு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டியது யார், அவர்களின் சிரிப்பு மழுங்கிப் போனதையும் மௌனங்கள் நிலையானதையும் கவனிக்காமலே நாம் கடந்து செல்ல முடியுமா?

ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைக்கும் இவ்வாறு நடந்திருக்குமா என்ற கேள்வியை மனதில் ஒரு முறையாவது கேட்டுக்கொள்ள வேண்டிய நேரம் இது. ஏனெனில் சத்தமின்றி அழும் பிள்ளையின் கண்ணீரைக் கவனிக்கத் தவறுவது அதன் வாழ்க்கையையே அழயச் செய்யக் கூடியது. எதிர்காலத்தின் ஒளிவிளக்குகளின் பிரகாசத்தைப் பேணிக்காக்க அனைவரும் செயற்படுவோம்..

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Couple /small family preferred. Avail. immediately.
**416.904.1813 /647.399.4684**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
**647.741.5335 / 647.779.5332**

**SIMCOE & BRITANNIA**
**OSHAWA -** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry & 1par king. walking distance to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.292.2401**

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking.Couple/female preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.339.3850**

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt apt for rent. Sep. entrance, 1 Parking. & 1 storage room. 2 Min. walk to bus stop. Avail. July 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.719.3248**

**MORNINGSIDE & NIGHTSTAR**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to Eraa Supermarket. Single/couple preferred. No pets & No smoking. Avail. July 01, 2025.
**647.656.1131/416.291.4340**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Couple preferred. 2 Min. walk to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.994.7229**

**MCCOWAN & STEELES**
1 Bedroom brand new bsmt for rent. Ensuite laundry & Parking. Couple /Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.669.5658**

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedrooms brand new bsmt for rent. Sep.entrance, 1 parking & sep. laundry. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.450.8019**

35 ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to Eraa Supermarket & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.330.4327**

**EGLINTON & BIRCHMOUNT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.906.8086**

**KINGSTON & LIVERPOOL**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & parking. Close to bus stop all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.966.1292**

**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms newly renovated walkout bsmt for rent. Sep. laundry & 1 Parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.880.4350**

**STAINES & STEELES**
1 Large bedroom bsmt for rent. female preferred (2 people can share). Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.618.9107**

**MARKHAM & 14TH AVENUE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Close to all facilities. Avail. immediately.
**905.472.1370 / 647.500.4564**

**TAUNTON & WHITES**
2 Bedroom new bsmt for rent. Sep. entrance, parking & laundry. Family or single female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.918.5065**

**WARDEN & LAWRENCE**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to bus stop & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.505.4449**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
1 Big bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Close to TTC, Eraa supermarket & all facilities. Avail. immediately.
**647.852.5360/647.963.0519**

**MARKHAM & 14TH AVENUE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1parking. No pets & smoking. Family preferred. Avail. immediately.
**647.705.0675 /647.831.7151**

**EGLINTON & BRIMLEY**
**Scarborough** நகரில் போக்குவரத்து வசதிகளுடன் (TTC) கூடிய 3 அறைகள் கொண்ட Basement வாடகைக்கு உண்டு. Parking & Laundry.
தொடர்புகளுக்கு: **416.317.2358**

**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom bsmt for rent. Laundry & parking. Family /couple /group of studentspreferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.261.3482**

**KENNEDY & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.909.2773**

**MIDLAND & FINCH**
3 Bedrooms & 2 washrooms bsmt for rent. Sep. entrance & sep. laundry. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.854.5171**

**BROCK & TAUNTON**
1 Bedroom walkout bsmt for rent. 1 parking. Close to bus stop & all facilities. Male preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.970.8392**

**ROSSBANK & FINCH**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.530.9724**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & BRIMORTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. No smoking & no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.761.7048**

**MIDLAND & EGLINTON**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
**647.278.5911/647.282.5902**

**MARKHAM & DENISON**
3 Bedrooms bsmt for rent. Sep entrance & 1 Parking. Close to Costco, Spiceland & all facilities. Rent-$2000. Avail. immediately.
**647.767.0853/ 647.271.8511**

**ST. CLAIR & BIRCHMOUNT**
One bedroom bsmt is available for rent from July 01, 2025. Sep. entrance & parking. Close to all facilities. Students preferable.
தொடர்புகளுக்கு: **416.268.8855**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom 1st floor for rent. All are separate. 1 Parking. walking distance to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.855.0339**

**9TH LINE & 14TH AVENUE**
2 Bedrooms new bsmt for rent. Sep. entrance, parking, open kitchen living space & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.920.5745**

**MARKHAM & DENISON**
2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Very convenient location with close by bus stop, grocery, school & plaza. Avail. June 01, 2025.
தொடர்புகளுக்கு: **416.450.7545**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 13, 14, 15, 16

## ROOM FOR RENT

**NEILSON & SHEPPARD**
Private room & Sharing room for rent in a house. 1 Min. walk to bus stop. 2 Min. walk to Malvern Mall & all facilities. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.278.2440**

**TAPSCOTT & FINCH**
1 Bedroom for rent in a 3 bedroom bsmt. Sep. entrance. Close to bus stop. Male preferred. No alcohol, smoking & pet. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.771.3735**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom for rent in a 2 bedroom bsmt. Sep. entrance. Male preferred. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.993.8760**

**ADELAIDE & CENTRAL PARK**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, Sep. washroom & parking. Close to Oshawa Tec/ Durham college. Female only
**647.278.5084/647.939.4784**

**PHARMACY & ELLESMERE**
Room for rent in main floor. Senior / working people preferred. Close to mall, shops & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.839.3710**

**ROUGHRIVER & SHEPPARD**
2 Bedrooms for rent in a main floor. Sep. washroom & parking. Female preferred. 10 Min. walk to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.920.2785**

**SCAR. GOLF CLUB & BRIMOTON**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Ladies only. Close to TTC & Mall & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.313.4399**

**PORT UNION & LAWRENCE**
1 Room for rent in a bsmt. Sharing kitchen, washroom & 1 Parking. Close to bus stop, go station & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.289.8514**

**NEILSON & TAPSCOTT**
1 Bedroom for rent in a 2 bedrooms Condo. Ladies only. In front of Malvern mall.Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.740.5534**

## ROOM FOR RENT

**WESTNEY & ROSSLAND (Ajax)**
1 Bedroom for rent in a house. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.688.2440**

**WARDEN & FINCH**
1 Bedroom for rent in a 3 bed rooms bsmt. Sharing washroom & Kitchen. Male only. Avail. immediately.
**416.704.4444/416.712.9079**

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent in upstairs. Female only. Close to Spiceland, Walmart & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.989.3829**

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedrooms in main floor for rent. Close to bus stop & stores. Shared Kitchen & washroom. All bills included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.410.4706**

**SIMCOE & TAUNTON**
**1800 SIMCOE ST. -** 1 Bedroom for rent in condo. Ladies only. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.7577**

**WESTNEY & ROSSLAND(AJAX)**
1 Bedroom in a 2 bedrooms bsmt & 1 Bedroom in upstairs. parking. Close to grocery store, Mall & all facilities. Avail. immediately.
**647.425.9798/250.613.8389**

**MORNINGSIDE & ELLESMERE**
Furnished rooms for rent. Single room $900 & sharing room (2 person) $500 per person (Including utility) Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.312.1947**

**MARKHAM & STEELES**
பகுதியிலுள்ள வீட்டில் 1 அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. அருகில் bus மற்றும் ஏனைய அனைத்து வசதிகளும் உண்டு. உணவும் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: **416.846.6093**

**MARKHAM & PAINTEDPOST**
1 Bedroom for rent in a bsmt. 1 Female/ 1 Male (Rent $900) Sharing rooms also available for male. Avail. immediately.
**Contact - 647.785.9979**

மேலும் பக்கங்கள் 12, 14, 15, 16

## ROOM FOR RENT

**WARDEN & LAWRENCE**
1 Bedroom for rent in a 2 bed rooms Apartment. 2 people living together. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**BROCK & KINGSTON**
**PICKERING -** 2 Bedrooms for rent in a 3 bedrooms bsmt. Sep. entrance. Close to HWY 401 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.301.9475**

**SCAR.GOLF CLUB &ELLESMERE**
1 Bedroom for rent in a 3 bed rooms bsmt. Sep. entrance & internet. Working female preferred. Avail. immediately.
**647.802.1599 / 647.963.2397**

**BRIMLEY & STEELES**
1 Bedroom available in a 2 bed rooms bsmt. Working / student **Girl to share with another girl.** Sep. entrance .Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.894.8349**

**BRIMLEY & EGLINTON**
Room & Bachelor room with wash room & kitchen for rent. Close to all facilities. Avail. immediately.
**416.294.0193/ 416.892.7762**

**MARKHAM & ELLESMERE**
1 Room for rent in the two bedroom basement. Avail. immediately. No parking. Wifi available.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom for rent in main floor. Close to TTC & all facilities. Avail immediately.
**416.889.3191/647.667.0482**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Spacious bedrooms walkout bsmt for rent. 1 parking. Close to TTC, HWY 401, UTSC & all facilities. No smoking & No pets. Avail. immediately.
**416.624.6895 /416.721.7832**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MORNING VIEW -** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1.5 washroom & 2 Parking. Walking distance to bus stop. Rent-$1900. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.202.4377**

## HOUSE FOR RENT

**MARKHAM & SHEPPARD**
3 Bedrooms house main floor for rent. parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.532.0416**

**MORNINGSIDE & MCNICOLL**
3 Bedrooms house for rent. 3 washrooms & 2 Parking. Close to bus stop, shopping mall & all facilities. Avail. July 01, 2025.
தொடர்புகளுக்கு: **416.219.4491**

**9TH LINE & 14TH AVENUE**
4 Bedrooms & 2.5 washrooms with unfinished bsmt house for rent. 4 Parking. Close to all facilities. Avail. immediately.
**416.786.7475/ 647.881.7180**

**MORNINGSIDE & MCNICOLL**
4 Bedrooms & 2.5 washrooms house for rent. 2 Parking. Close to all facilities. Avail. immediately.
**416.613.1792/ 437.260.6478**

**HARWOOD & ROSSLAND (AJAX) -** 3 Bedrooms house for rent. parking. Close to bus stop, Mall, School & all facilities. Avail. immediately.
**647.656.6214/647.588.6214**

## CONDO. FOR RENT

**NEILSON & MCLEVIN - 430**
2 Bedrooms + Den newly renovated Condo. for rent. 1 Parking & 1 Locker. Close to TTC, Malvern mall & all facilities. Avail. June 01,2025.
தொடர்புகளுக்கு: **647.338.5652**

**KENNEDY & SHEPPARD**
3 Bedrooms spacious Condo. for rent. Walking distance to TTC, GO station & Walmart. No pets & no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.309.4956**

**KENNEDY & ELLESMERE**
2 Bedrooms Condo. apartment for rent. Parking. Very close to TTC, HWY 401 & all facilities. No pets & No smoking. Avail. June 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.873.1460**

## APPARTMENT FOR RENT

**BRIMLEY & SHEPPARD**
1 Bedroom apartment for rent. Couple/ single preferred. Ensuite laundry. Close to school & all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.874.5373**

Vlambaram -June 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-05-31 5:04 PM Page 14



## வாடகைக்கு
**4 BR, 3 BR, 2 BR, 1 BR Full House, Condo, Basement & Business Unit**
**647-861-8240**

## BASEMENT FOR RENT
**TAUNTON & BROCK**
**PICKERING** - 2 Bedrooms & 1 full bath bsmt for rent. Sep. entrance (4 Steps, Sep. laundry & 1 park ing. Single/ Couple/ Seniors pre ferred. Rent - $1,500.(Negotiable) Avail. immediately.
**647.607.5679/416.770.3806**

## BASEMENT FOR RENT
**MARKHAM & 14TH AVENUE**
2 Bedrooms furnished brand new bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop & all facilities. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.760.1498**

## வாகனப் போக்குவரத்து
விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்டதூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு
அழையுங்கள்:**416.880.5952**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & MILITARY TRAIL -** 2 Bedrooms newly reno vated bsmt for rent. Sep. entrance & 1 parking. Walking distance to UofT, bus stop, Walmart & all facilities. Avail immediately.
தொடர்புகளுக்கு:**416.802.5050**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to bus stop, School, Eraa supermarket, Spiceland & all facilities. Avail immediately.
தொடர்புகளுக்கு:**416.303.8829**

## BASEMENT FOR RENT
**SCAR. GOLF CLUB & BRIMORTON -** 2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.276.9503**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedrooms Walkout bsmt for rent. 1 Washroom & 1 parking. Close to bus stop, Eraa supermarket & all facilities. Avail. immediately.
**416.710.8304/ 647.717.9157**

## BASEMENT FOR RENT
**WARDEN & ELLESMERE**
3 Bedrooms bsmt for rent. 2 Wash rooms, sep.entrance, parking & laun dry. family/working couple/ students preferred. Close to bus stop & HWY 401 & 404. Avail. July (1st week) 2025.
தொடர்புகளுக்கு: **416.770.0178**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, utilities & internet. Mins. to TTC. Close all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.786.5816**

## BASEMENT FOR RENT
**MCCOWAN & LAWRENCE**
1 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Very close to bus stop, Scar. Hospital, Mall & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.717.9556**

## BASEMENT FOR RENT
**BRIMLEY & STEELES**
1 Bedroom bsmt with food for rent. Sep.entrance & parking. Close all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.918.1096**

## BASEMENT FOR RENT
**MARKHAM & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent and 1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to TTC, Centanial College & Shopping facilities. Avail. June 01, 2025.
தொடர்புகளுக்கு: **416.558.2228**

## BASEMENT FOR RENT
**MARKHAM & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop, Centenneial college, STC & all facilities. Avail. June 10, 2025.
தொடர்புகளுக்கு: **416.271.4068**

## BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
2 Bedrooms furnished bsmt for rent. Sep. entrance & parking. 1 Bigroom available. 2 people can share. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.705.0849**

## BASEMENT FOR RENT
**MIDLAND & STEELES**
2 Bedrooms bsmt for rent.
**BROCK & ROSSLAND(AJAX)**
1 Bedroom bsmt for rent. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.768.6927**

## BASEMENT FOR RENT
**MARKHAM & 14TH AVENUE**
2 Bedrooms & 1 washroom basement for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.296.7932**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Walking distance to schools, shopping & park. No pets & no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.200.0478**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to bus stop, shopping mall & all facilities. Avail. immediately.
**647.971.6193/416.300.9817**

## BASEMENT FOR RENT
**THICKSON & NICHOL**
1 Bedroom walkout bsmt for rent. Sep. laundry & 1 parking. Walking distance to Whitby mall & all facilities. Avail. immediately.
**437.967.0848/647.704.9521**

## BASEMENT FOR RENT
**SEASONS DRIVE & STAINES**
2 Bedrooms bsmt for rent. Sep. Entrance & 1 parking. Close to TTC, School & all facilities. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.989.6806**

## BASEMENT FOR RENT
**KENNEDY & EGLINTON**
**Scarborough -** 2 Bedrooms bsmt for rent. 1 Washroom & Sep. en trance. Close to Kennedy subway & TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.920.5499**

## BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
2 Bedrooms + den bsmt for rent. Sep.entrance, Parking & laundry. Close to Amazon, Canada Post, TTC, YRT, Major Banks, Srilankan grocery stores & all other facilities. No pets, no smoking & no alcohol. Working female or students preferred. Avail. immediately.
**Please Contact 647.284.2735**

## BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep.entrance & laundry. Close to Amazon, TTC, YRT, Banks & all facilities. Female preferred. No pets, no smoking Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.284.2735**

## BASEMENT/ROOM FOR RENT
**MARKHAM & SHEPPARD**
1 Large bedroom with sep. washroom for rent. Rent $1000. 2 Male Preferred.
**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent $1600 + Utility. Rooms available $500 & $600.
**DON MILLS & STEELES**
2 Bedrooms bsmt for rent $1600 + Utility.
No alcohol, no pets & no smoking. Avail.immediately.
**647.507.2148/647.864.1051**

## BASEMENT & ROOM FOR RENT

**HWY 7 & HWY 27**
**WOODBRIDGE - BRAMPTON**
1 Bedroom basement for rent. Sep. entrance & parking.

1 Bedroom in upstairs. Female only.
Please contacts: **416.428.2141**

## ROOM FOR RENT

**WESTNEY & HWY 401**
**AJAX -** 3 Bedrooms for rent in upstairs. parking. Walking distance to TTC, School, park & church. Close to go station. Female only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.236.7123**

## ROOM FOR RENT

**KINGSTON & LAWRENCE**
1 Bedroom for rent in a main floor. Close to bus stop & all facilities. Utility included. Avail immediately.
**416.458.4581/416.984.6737**

## HOUSE FOR RENT

**ST. CLAIR & BIRCHMOUNT**
3 Bedrooms in main floor & 1 bed room in bsmt full house for rent. Sep. entrance & parking. Close to Warden subway, Hindu temple, Super market & all facilities. Avail. July 01, 2024.
**Please call - 416.268.8855**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & OLDFINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to school, TTC & other facilities. Avail. immediately.
**416.825.0566/647.502.8680**

## ROOM FOR RENT

**HWY 7 & 9TH LINE**
2 Bedrooms for rent in upstairs. Shared washroom & kitchen. Ladies only. Close to bus stop. Walking distance to hospital & School. Avail. immediately.
**647.293.5899/647.449.8059**

## ROOM FOR RENT

**MCLEVIN & NEILSON**
1 Bedroom for rent in upstairs. Seperate washroom. Ladies only. all inclusive. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.771.8426**

## HOUSE FOR RENT

**TAUNTON & WHITES**
**PICKERING -** 3 Bedrooms town house for rent. 2 parking. Close to bus stop, Stores & all facilities. No pets. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.336.1015**

## BASEMENT FOR RENT

**TAUNTON & BURKHOLDER**
**PICKERING -** 2 Bedrooms new bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 Parking. Close to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.680.3167**

## HOUSE/BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## ROOM FOR RENT

**MARKHAM & FINCH**
1 Bedroom for rent in a 3 bedrooms bsmt. Sep. entrance & Sep. laundry. Wifi included. Close to Malvern mall & all facilities. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.606.8994**

## HOUSE & BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
4 Bedrooms house, 3 bedrooms house & 2 Bedrooms bsmt for rent. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**416.662.9935**

## BASEMENT FOR RENT

**ROSSLAND & SALEM(AJAX)**
2 Bedrooms & 2 washrooms brandnew big bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to bus stop, Go Train & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.565.1153**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & STAINES**
1 Rooms & Sharing room for rent in upstairs. Male only. Parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**437.237.2030**

## ROOM FOR RENT

**HWY 7 & 9TH LINE**
1 Bedroom for rent in main floor. Prefer Single female. Kitchen & Laundry shared. Close to shopping centers, bus, restaurants, banks, parks & Go stations. NO Smoking & NO Pets. Rent: 950.00 (Utilities included).
தொடர்புகளுக்கு:**416.457.7162**

## HOUSE/ROOM FOR RENT

**BELLAMY & EGLINTON**
4 Bedrooms in main floor & 2 Bedrooms bsmt full house for rent. Rooms also available. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.902.4353**

## BASEMENT FOR RENT

**SIMCOE & BRITANNIA**
3 Bedrooms walkout bsmt for rent. Parking & laundry. 10 min walk to Ontario Tech University & Durham College. Avail. June 01, 2025.
**647.764.5933/416.897.3903**

## ROOM FOR RENT

**CHURCH & KINGSTON (AJAX)**
2 Bedrooms for rent in upstairs. Parking available. Close to TTC & all facilities. No smoking & No pets. Avail. immediately.
**647.869.1252/416.844.9102**

## ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**
2 Rooms for rent in a 3 bedrooms bsmt. Shared kitchen. Male only. Close to TTC & all facilities. Avail. June 01, 2025.
தொடர்புகளுக்கு:**416.825.0566**

## ROOM FOR RENT

**HWY 401/PORT UNION**
**(Centennial Rd)** - 1 Bedroom with sep. washroom for rent in a bsmt. Laundry & internet included. Parking. Close to bus stop, UTSC, Rough Hill Go station & Centennial College & all facilities. Avail. July 01, 2025.
தொடர்புகளுக்கு: **416.315.1933**

## BASEMENT FOR RENT

**HWY 401 & BROCK**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & utilities. Close to all facilities. 2 mins. walk to Walmart. Avail. immediately.
**289.892.4577/416.209.4115**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities.
**647.673.7416/647.764.8274**

## HOUSE & BASEMENT FOR RENT

1. **SCARBOROUGH -** 3 Bedrooms & 1 washroom house & 2 Bedrooms bsmt for rent.
2. **MARKHAM & STEELES -** 4 Bedrooms & 3 washrooms house & 2 Bedrooms bsmt for rent.
3. **PICKERING (WHITES & TAUNTON) -** 4 Bedrooms & 3 washrooms house & 2 Bedrooms bsmt for rent.
4. **AJAX -** 4 Bedrooms & 3 washrooms house & 2 Bedrooms bsmt for rent.

தொடர்புகளுக்கு: **647.850.7831**

## BASEMENT/ROOM FOR RENT

**9TH LINE & HOOVER PARK -** 2 Bedrooms & 2 washrooms big bsmt for rent. Sep. entrance & 1 parking.
**MARKHAM & STEELES -**1 Bedroom bsmt for rent. Sep. entrance.
**CONLINS & SHEPPARD -** Rooms for rent. Shared kitchen & washroom & 1 parking.Close to U of T. Single room $800, shared room $900. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு**: 416.805.3355**

## HOUSE/ROOM FOR RENT

**MARKHAM & STEELES -** 4 Bedrooms house for rent. 2 Parking. 2 Minute to TTC & all facilities.
**MORNINGSIDE & OLD FINCH -** 2 Bedrooms for rent in a bsmt. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு**: 416.627.6194**

## HOUSE/BASEMENT FOR RENT

**SCARBOROUGH & MARKHAM AREA** - House & Basement available for rent. Available immediately.

தொடர்புகளுக்கு: **647.248.1095**

## HOUSE/BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**

4 Bedrooms & 3 washrooms house for rent.

2 Bedrooms & 2 washrooms bsmt for rent.

**416.918.9848/416.857.7603**

## HOUSE FOR RENT

**KENNEDY & ELLESMERE**

3 Bedrooms main floor for rent. Boys/ Girls preferred. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.899.9199**

## திருமண சேவை

கனடா மற்றும் இலங்கையில் வாழும் பொருத்தமான மணமக்கள் எம்மிடம் உண்டு.

தொடர்புகளுக்கு: **437.849.9619**

## HOUSE FOR RENT

**WARDEN & ELLESMERE**

3 Bedrooms bungalow house for rent. Laundry & parking. Small family/working people preferred. Close to TTC & all facilities. Avail. July 2025.

தொடர்புகளுக்கு: **416.770.0178**

## HOUSE/CONDO. FOR RENT

**DOWNTOWN**

**3** Bedrooms town house

1+ Den newly built Condo. with lots of amenities with locker. Avail. immediately.

**416.918.9848/416.857.7603**

## HOUSE FOR RENT

**BRIMLEY & ELLESMERE**

3 Bedrooms bangalaw house for rent. 1.5 washroom & 1 Parking. Close to bus stop, STC & shopping mall. No pets. Couple / Family Preferred. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**647.649.9780**

## பராமரிப்பாளர் தேவை

வயோதிபப் பெண்மணியைப் பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும். **OSHAWA**வில் வாழ்பவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **416.435.7928**

**0041.788645558** (Whatsapp only)

## HOUSE FOR RENT

**MORNINGSIDE &SEWELLS**

3 Bedrooms house for rent. 1.5 washroom & 2 Parking. Close to bus stop, shopping mall & all facilities. Avail. July 01, 2025.

தொடர்புகளுக்கு:**416.262.3491**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & ELLESMERE**

3 Bedrooms & 2.5 washrooms house for rent. Parking available. Steps to school, 24 hrs. TTC & UofT. Avail.August 01, 2025.

**416.540.5853/416.930.9457**

## V MOVE & DELIVERY

உங்களின் சிறியளவிலான மற்றும் பெரிய அளவிலான உள்ளூர் மற்றும் வெளியூர் **Toronto - Montreal/ OTTAWA moving** தேவைகளுக்கு

அழையுங்கள்.

**416.277.4245**



## வீட்டு பராமரிப்பு

வீட்டுவேலையுடன் வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும். இடம் : Pickering

தொடர்புகளுக்கு:**647.970.8392**




## JOB VACANCY

**CLEANING & GENERAL LABOUR**

**SCARBOROUGH GTA** பகுதியில் Cleaning மற்றும் General labourஆக தொழில் புரிவதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **416.807.4013**

## WALK IN CLINIC

**DR.U.SOMASUNDARAM**

Family Physician

1200 Markham Road, Unit No.115

Scarborough, ON M1H 2Y9

**T: 416.439.8085**

**Open Hours - Monday - Friday**

**9:00Am - 7:00 Pm**

## COOK & KITCHEN HELPER WANTED

**Danforth & Coxwell, Yonge & Bloor**இல் உள்ள இரண்டு Restaurantஇற்கு Cook & Kitchen helperதேவை. FULL TIME & PART TIME.

தொடர்புகளுக்கு : **416.999.7015 /rasiah@live.ca**

## வயோதிபர் பராமரிப்பு இல்லம்

**SUTTON WEST (Close to NEWMARKET)** பகுதியில் வயோதிபர்களுக்கான பராமரிப்பு வழங்கப்படும் இல்லம்.

* தனிஅறை வசதி * சாப்பாடு * 24 மணிநேர பராமரிப்பு

தொடர்புகளுக்கு: **416.319.7824**

## CHEF & COOK WANTED

**SCARBOROUGH**இலும் **DOWNTOWN**இலும் அமைந்துள்ள **ENGLISH PUB**இற்கு **Experienced CHEF & COOK wanted immediately.**

**Full time / Part time**

**Please Contact : 416.566.9994**

Watson Property Management
wpm
We Pro-Manage your Properties!

FREE
FOR CONSULTATION/ SUGGESTIONS!
416 284 9999

WATSON PROPERTY MANAGEMENT

About Us

With 30 years of experience in real estate, we proudly manage over 100 properties for diverse landlords, including:

- Foreign property owners
- Multi-property investors
- First-time buyers looking to maximize their property Value

We ensure cost-effective and hassle-free property management, handling everything from marketing to maintenance.

Our Services

Effective Marketing – Maximize property exposure.
Affordable Maintenance – Trustable handymen with cost effective repairs.
Property Showings – Find the right tenants.
Market Updates – Stay informed on property value.
Tenant Screening – Secure reliable and responsible renters.
Lease Renewals & Rent increase – Maximize rental income.
Lease Preparation – Handle all paperwork.
Financial Reports – Year-end accounting for tax purposes.
Move-in Assistance – Stress-free key handovers.
Legal Notices & Paralegal Support – Professional paralegal guidance.
Rent & Utilities Collection – Timely payments guaranteed.
Move-out Management – Key collection and final walkthroughs.
Regular Inspections – Regular walkthroughs every 6 months.



MANAGING OVER 100 PROPERTIES ACROSS VARIOUS CITIES AND TOWNS WITHIN A 2-HOUR RADIUS OF TORONTO.




AJAX
BRAMPTON
BOWMANVILLE
BEAVERTON
COURTICE
ETOBICOKE
KESWICK
KINGSTON
MARKHAM
VAUGHAN
STOUFFVILLE
KITCHENER
MISSISSAUGA
NORTH YORK
OSHAWA
PICKERING
SCARBOROUGH
TORONTO
TRENTON
WHITBY
WATERLOO
NIAGARA
NEWCASTLE
RICHMOND HILL



We're Expanding & Hiring!

As we CONTINUE TO GROW and serve more areas, we're looking for reliable handymen to join our trusted maintenance NETWORK. If you're a skilled handyman OR know someone who is we'd love to hear from you! WE'D love to work together.

REACH US @: 416 284 9999

# வேடன்



குரு அரவிந்தன்

வேடன் என்றால் என்னவென்று யோசிபீர்கள், சங்க இலக்கியத்தில் வேட்டுவன் என்ற சொல் பாவனையில் இருந்திருக்கிறது. வேடன் என்றால் வேட்டையாடுபவன் என்றும் பொருள்பட லாம். நான் இங்கே சொல்ல வந்தது 'வேடன்' என்ற புனைப்பெயர்கொண்ட ஒரு பாடகனைப் பற்றியது. இவர் பாடல்களை யும் எழுதியிருக்கின்றார். இன்று எங்கள் சமூக ஊடகங்களில் அதிகம் பேசப்படும் சொல்லாகவும் இந்த வேடன் சொல் இருக்கின்றது.

ஹிரந்தாஸ் முரளி என்று சொல்லப்படும் 30 வயதான இவரது தந்தை கேரளாவை யும், தாயார் யாழ்ப்பாணத்தையும் சேர்ந்தவர்கள். இவர் திருசூரில் பிறந்தார். இவர் தனது மார்பிலே 'அ' என்ற தமிழ் உயிரெழுத்தின் முதல் எழுத்தைப் பெரிதாகப் பச்சை குத்தி இருப்பதால், தமிழ் இசைப் பிரியர்களின் பார்வை இவர்மீது திரும்பியது. பாலக்காட்டில் நடந்த ஒரு நிகழ்ச்சியின்போது இதுவரை இவ்வளவு கூட்டம் எந்த ஓர் இசை நிகழ்ச்சிக்கும் சேரவில்லை என்று அறி விப்பாளர் குறிப்பிட்டார். கனடாவைச் சேர்ந்த ஓர் இளம் பெண்கூட இவரது பாடல்வரிகளுக்கு ஏற்ப பாவனை செய்து தனது முகநூலில் பதிவிட்டிருக்கின்றார்.

ஒரு காலத்தில் மைக்கல் ஜாக்ஸன் எப்படி பரதநாட்டியத்தைத் தனது காணொளியில் கலந்து வெளியிட்டுத் தமிழரிடையே பிரபலமானாரோ, அதேபோல இவர் தமிழரின் பறை இசையைக் கலந்து கேரள மக்களைக் கவர்ந்து வருகின்றார். இதைவிட ஒடுக்குமுறை குறித்த துணிச்ச லான இவரது பாடல் வரிகளுக்காக



'வாய்ஸ் ஆஃப் தி வாய்ஸ்லெஸ்' என்ற தனது முதல் இசை காணொளிமூலம் அவர் பிரபலமானார். 'பூமி என்ஜன் வாழுனிதம்' என்ற இசைத்தட்டு அடுத்து வெளிவந்ததும் இன்னும் ரசிகர்கள் அதிகமாயினர்.

ஒருவர் தனது துறையில் வேகமாக வளர்ந்து பிரபலமாகும்போது, அவர்மீது அவதூறு சொல்லவும் சிலர் இருப்பர். தங்களால் முடியவில்லையே என்ற ஆதங்கம் வெறுப்பாக மாறலாம். அதுவே பிரபலமானவரை பெண்களுடன் தொடர்பு படுத்தியோ அல்லது போதைவஸ்துவுடன் தொடர்புபடுத்தியோ சில பொது ஊடகங் களில் உள்ளவர்கள் அவதூறுகளை எழுதத் தொடங்கிவிடுவர். இவர் முகநூலில் பெண்களைப்பற்றித் தவறாக எழுதினார் என்றும், இவரது நண்பர்கள் போதைவஸ்து வைத்திருந்தனர் என்றும், தனது கழுத்திலே புலிப்பல்லைக் கட்டித் தொங்கவிட்டார் என்றெல்லாம் இவர்மீது குற்றங்கள் சுமத்தப்பட்டன. இசையுலகில் நீர்க்குமிழிபோல உடைந்து போவாரா அல்லது இதையெல்லாம் கடந்து இவர் செல்வாரா என்பதைக் காத்திருந்துதான் பார்க்க முடியும்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

விளம்பரம் பத்திரிகையை எப்பொழுதும் எங்கிருந்தும் 24 மணிநேரமும் வாசிக்க -
vlambaram.com தொலைபேசி இல - 416.282.8059

Vlambaram -June 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-05-31 5:04 PM Page 18



# ஊர்திரும்பல் – புத்தக விமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

கடந்த மே 25ஆம் திகதி ஊர்திரும்பல் என்ற நூலின் வெளியீடு நடைபெற்றது. அப்புத்தகம் ஆங்கிலம், தமிழ் என்ற இரு மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. இப் புத்தகத்தில் ஒவ்வொரு மொழியிலும் ஏழு அத்தியாயங்கள் உள்ளன. ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு சிறுகதை ஆகும். இந்த ஏழு சிறுகதைகளும் இரு மொழி களிலும் உள்ளன.

இப்புத்தகத்தின் முக்கிய சிறப்பு அதன் ஆசிரியர்கள். நான்கு கதைகளை ஸ்ரீரஞ்சனி தமிழில் எழுதி உள்ளார். மூன்று ஆங்கிலக் கதைகளை அவரது மகள் சிவகாமி எழுதி உள்ளார். பின்னர், ஸ்ரீரஞ்சனியின் கதைகள் ஆங்கிலத்திலும், சிவகாமியின் கதைகள் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டன. இதனால் ஏழு கதைகளும் இரு மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இதன் நோக்கம் என்னவென்றால், தமிழரது கதைகளை உயர்தரப்பாடசாலை மாணவர் களுக்கு எடுத்துச் செல்வதற்காகும். சில வருடங்களுக்கு முன்னர் ஸ்ரீரஞ்சனி மற்றும் சிவகாமி, 'சிந்துவின் தைப் பொங்கல்' என்ற சிறுவர் கதையை ஆங்கிலத்திலும், தமிழிலும் சேர்த்து நூலாக வெளியிட்டனர். இது கனடிய ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்காக படங்களுடன் அமைக்கப்பட்ட சிறிய நூலாகும். இதன்பின்னர், இவர்களிடம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்காக நூல் ஒன்றை வெளியிட வேண்டும் எனக் கேட்கப்பட்டது.

இவ்வேண்டுகோளுக்கு ஏற்றவிதத்தில் 'ஊர்திரும்பல்' என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.

இப்புத்தகத்திலிருக்கும் கதைகள் வருமாறு:

1. Homecoming (ஊர்திரும்பல்)
2. Sister Stars (கார்த்திகை பெண்கள்)
3. பேசலின்றிக் கிளி ஒன்று (Songless Bird)
4. இழை ஒன்று அறுந்துப் போகின்றதா (Distintegration)
5. முகிலிருட்டில் (A Passing Black Cloud)
6. Reunion (மீளிணைவு)
7. நிழலில் நிஜம் தேடி (Hidden within the Shadows)

சிவகாமி எழுதிய மூன்று ஆங்கிலக் கதை களும் இலங்கையில் பிறந்து, போரினால் கனடாவிற்கு புலம்பெயர்ந்த இளம்பெண் ஒருவர் முதல்முறையாக இலங்கைக்கு செல்வதுபோல அமைகிறது.

Homecoming என்ற கதையில் நிலானி என்ற 25 வயதுப்பெண் இலங்கைக்கு வந்தடைந்த உடனே கொழும்பில் இருப்போர் அவர் சிங்களம் பேச மாட்டார் என்றவுடன் அவரை இந்தியர் என்று எண்ணுகின்றனர். இவ்வாறு தமிழரை அடையாளம் கண்டு கொள்ளாத நாட்டிற்கு ஏன் தனது தாய் திரும்ப எண்ணினார் என நிலானி யோசிப்பது




இக்கதையாகும்.

இவ்வாறு இந்நூல் தமிழரிடையில் 'அடை யாளம்' பற்றிய சிந்தனை காலப் போக்கில் எப்படி மாறிக்கொண்டு வருகிறது என எடுத்துக்காட்டுகிறது.

உதாரணமாக Sister Stars என்ற கதையில் மூன்று சகோதரிகள் இலங்கை, கனடிய மற்றும் தமிழ் அடையாளங்கள் பற்றியும் தமது சொந்த அடையாளம் பற்றியும் தம்முள் கதைக்கின்றனர். கனடிய இளைஞர்களுக்கு இடையில் பிரபலமான இத்தகைய உரை யாடல் அடையாள சிக்கல்களை ஆராய்கிறது.

இதன்பின்னர் சிவகாமி எழுதிய கதை Reunion ஆகும். இக்கதையும், அவரது தாய் எழுதிய 'நிழலில் நிஜம் தேடி' என்ற கதையும் இலங்கைக்குத் திரும்பிய சிறுமி, போரில் காணாமல்போன தனது தந்தையைச் சந்திப்பதுபோல அமைகின்றன.

இவ்வாறு இப்புத்தகத்தில் இலங்கைப் போரின் பின்விளைவுகளைக் கூறும் 'பேசலின்றிக் கிளி ஒன்று' போன்ற கதைகள் உள்ளன. இக்கதைகள் இரு மொழிகளிலும் இருப்பதால் இலங்கைப் போர் பற்றி தமிழ் மற்றும் வேறு இன உயர்தரப்பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகம் செய்துவைக்க உகந்த நூலாக ஊர்திரும்பல் அமையும்.

இதேபோல, 'இழை ஒன்று அறுந்து போகின்றதா' மற்றும் 'முகிலிருட்டில்' போன்ற கதைகள் கனடிய மாணவர்களுக் குத் தெரிந்த விடயங்களை இலகுவான தமிழில் சித்தரிக்கின்றன. இவை உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்குத் தமிழைக் கற்க உதவும் என நம்புகின்றேன்.

# தமிழர் வயது...

7ஆம் பக்கத்தொடர்ச்சி

நாம் செய்ய வேண்டும். அதற்கான தரவை கீழடி நமக்குக் கொடுத்துள்ளது என்பதுதான் அதன் முதன்மையான முக்கியத்துவம் என்று நான் நினைக்கிறேன்.

கேள்வி - கிடைத்துள்ள தடயங்கள் அடிப்படையில் கீழடியின் காலகட்டத்தை எதிலிருந்து எதுவரை வரையறை செய்துள்ளீர்கள்?

பதில் - கிமு 800 முதல் கிபி 300வரை, ஆயிரம் ஆண்டுகள் அங்கு ஒரு நகர நாகரிகம் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கிமு 800இல் தோன்றி வளர்ந்து பின்னர் சரிவடைந்துள்ளது. கிமு 800 முதல் கிமு 500 வரையான கால கட்டம் ஒரு நகரம் உருவாவதற்கான முந்தைய காலம். கிமு 500 முதல் கிமு 100 வரை வளர்ச்சியடைந்த நகரமாக இருந்துள்ளது. கிமு 100 முதல் கிபி 300 வரை அந்த நகரம் நலிவடைந்த கால கட்டமாக நாங்கள் கணித்துள்ளோம்.

கேள்வி - கீழடியில் முதல் இரண்டு கட்ட அகழாய்வுகளை நீங்கள் செய்தீர்கள். அதற்கான அறிக்கையைச் சமர்ப்பித்துள் ளீர்கள். அதுதான் இப்போது திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் என்னென்ன சொல்லியுள்ளீர்கள்?

பதில் - கீழடியில் செய்யப்பட்ட முதல் இரண்டு கட்ட அகழாய்வு குறித்த முழுமையான தகவல்கள் அடங்கிய அந்த அறிக்கையை 982 பக்கங்களில் கொடுத்து இருக்கிறோம். கீழடி தொல்லியல் தளத்தின் காலகட்டம், அங்கு நிலவிய கலாசாரம், அங்கு வாழ்ந்த மக்கள் விவசாயம் செய்த பயிர்கள், அவர்கள் வளர்த்த விலங்குகள், அந்த இடம் எப்படி ஒரு நகர நாகரிகத்தை நோக்கி நகர்ந் திருக்கக்கூடும் என்பன போன்ற கேள்வி களுக்கு ஆரம்பகட்ட விடைகளை அளிப்பதாக இவ்ஆய்வறிக்கை இருக்கும்.

கீழடியில் கிடைத்த உயிரியல் எச்சங்களை ஆய்வுசெய்தபோது, அதில் குறிப்பிடத்தக்க அளவில் நெற்பயிரின் எச்சங்களும் உமியும் கிடைத்தன. இதனால், அங்கு பெரிய அளவில் நெற் பயிர் விளைவிக்கப்பட்டிருப்பது தெரிகிறது. இங்கு தொடர்ந்து விளைச்சல் அதிகரித்து, இதனால் ஏற்பட்ட உபரியால், உள்நாட்டு-வெளிநாட்டு வணிகமும் வர்த்தகமும் நடக்க ஆரம்பித்து, மெல்ல மெல்ல கீழடி ஒரு நகர்ப்புறமாக மாற ஆரம்பித்துள்ளது. கீழடிப் பகுதியில் பெரிய அளவில் விலங்குகளின் எலும்புகள் கிடைத்ததை வைத்துப் பார்த்தால், கீழடியின் பொருளாதாரத்தில் அவை முக்கியபங்கை வகித்திருக்கக்கூடும். வீடுகளில் எருமை, ஆடு, செம்மறியாடு போன்ற விலங்கு களை வளர்த்ததுபோக, கொம்புகள், தோல் போன்ற பொருட்களுக்காக மிருகங்களை வேட்டையாடுவதும் கீழடி யில் நடந்திருக்கிறது. காட்டு மாடுகள், காட்டெருமைகள் போன்றவை வேட்டை யாடப்பட்டிருக்கின்றன. நாய்கள் செல்லப் பிராணிகளாகவோ பாதுகாப்புக்காகவோ வளர்க்கப்பட்டிருக்கக்கூடும். ஒட்டுமொத்த மாகப் பார்க்கும்போது, கீழடியின் பொருளாதாரத்தில் கால்நடைகளுக்கு மிகவும் முக்கியமான பங்கு இருப்பது தெரிய வருகிறது.

கீழடியில் கிடைத்த விலங்கு ஆதாரங் களிலேயே மிகவும் கவனிக்கத்தக்கது குதிரை பற்றியதுதான். கீழடியில் இருந்த மக்கள் குதிரைகளை வளர்த்ததற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பது தொல்லியல் ரீதியில் மிக முக்கியமானது. "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்/காலின் வந்த கருங்கறி மூடையும்/வடமலைப் பிறந்த மணியும், பொன்னும்/குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்" என்கிறது சங்க காலப் பாடலான பட்டினப்பாலை. அதாவது, 'கடல் மூலம் கொண்டுவரப்பட்ட வேக மாகச் செல்லக்கூடிய நிமிர்ந்த குதிரை கள், சரக்கு வண்டிகளில் கொண்டு வரப்பட்ட மிளகு மூட்டைகளும் வடமலை யிலிருந்து வந்த தங்கமும் மேற்கு மலை களிலிருந்து வந்த சந்தனமும் அகிலும்' என்பது இந்த வரிகளின் அர்த்தம்.

தென்னிந்தியாவிலேயே தொல்லியல் தளங்களில் குதிரைகள் வளர்க்கப்பட்ட தற்கான ஆதாரங்கள் மிகக் குறைவாகவே கிடைத்திருக்கின்றன. இப்பின்னணியில் பார்க்கும்போது, குதிரைகள் சங்க காலப் பாடலான பட்டினப்பாலையில் சொல்லப்படு வதைப்போல, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கக்கூடும்.

சங்க காலத்தில் தமிழ்நாட்டின் நகர வாழ்க்கை எப்படியிருந்தது என்பதை சங்கப் பாடல்கள் விரிவாக உரைக் கின்றன. குதிரை உட்பட கீழடியில் கிடைத்த சில சான்றுகள், இந்த இலக்கியங்கள் காட்டும் சங்க காலத்தை சிறிய அளவிலாவது உறுதிப்படுத்துகின்றன.

முதல் இரண்டு கட்ட அகழாய்விலேயே 7 இலட்சம் பானை ஓடுகள் கிடைத்தன. அதை அங்கேயே பட்டியலிட்டு, அதில் இருந்து 1 இலட்சத்து 3 ஆயிரம் பானை ஓடுகளை அலுவலகத்துக்குக் கொண்டு வந்தோம். அதிலிருந்து வடிவம் பிரகாரம் பட்டியலிட்டு 13,900 பானை ஓடுகளைத் தேர்வு செய்தோம். அதை முறைப்படி ஆய்வுக்குட்படுத்தி 1,842 பானைகளைக் கண்டடைந்தோம். தமிழ் பிராமி எழுத்துகள் 108, குறியீடுகள் 197ஐ அட்டவணைப்படுத்தினோம். இப்படி முறை யாகப் பட்டியலிட்டு சமர்பிக்கப்பட்ட ஆய்வறிக்கை தமிழ்நாட்டிலிருந்து இது தான் முதல்.




இந்த இரண்டு அகழாய்வுகளிலும் சேர்த்து மொத்தமாக 2,447 பானை ஓட்டு கிறுக்கல்கள் கிடைத்துள்ளன. பல தமிழ் பிராமி எழுத்துகளும் கிடைத்துள்ளன. 'திசன்' போன்ற பிராகிருத வார்த்தைகளும் கிடைத்துள்ளன. இந்த இரண்டு அகழாய்வுகளில் கிடைத்த முடிவுகளை வைத்துப் பார்க்கும்போது, தமிழ்நாட்டின் ஆரம்பகால வரலாற்றையும் சங்க காலத்தையும் மேலும் அறிந்துகொள்ள கீழடி மிக மிக முக்கியமான தொல்லியல் தளமாக இருக்கும் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம்.